பதிவுபத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதி௵ (1889)
வைகாசி௴ உ௷
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1-க்கு		ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்		ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௭ } யாழ்ப்பாணம்:—குரோதன௵ ஆடி௴ ௧௯; (1925 ஆகஸ்ட் 3) திங்கட்கிழமை { இலக்கம்—௧௦.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்த விநாயகனருள் வணங்கிவாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகிக்கும்
சமையல் அடுக்கு

ருக்மணிகுக்கர்தான்.

கனம் எட்டியாபுரம், ராஜா, டாக்டர் வரதராஜுலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் நன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒருமணிக்குள் கஷ்டமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

அளவு	ஒருவர்	2	4	6	8 பேர்.
விலை ரூபா	13.	18	22	27.	33.

விபர புத்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
(Y. 45.) இராயபுரம், மதராஸ்.

Hakeem, M. Mohamed Ebraheem & Co;
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL.
POTO-NOVO (South India)

அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத் திடத்தையும் அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும்
தங்க மெடல்களும் பரிசு பெற்ற
மதன மோஹன

சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

அசல் பாகம்! ——o—— அருமையானது!!

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினாலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை எனறு ருஜுவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும்.

அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அநுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சத்திகளும் வாய்த்த இந்த அசல் "முபற்ரு" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இல்வாழ்க்கையிலே நாம் என்றுங் கண்டிராத சித்தானந்த கெம்பீர சித்சுகவிலாச கலைகளையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோகத்திய "மகாசஞ்சீவினி" இதுதானோ? என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆணாகப் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே குருநோய்வாய்ப்பட்டுக் கெட்டும், இன்னும் பலவித காரணங்களினாலும் தேகத்திற்கு சத்தாரணமாகிய நல்லிரத்தத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேற்பன மிகுதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினாலும் ஜீவாதார பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், சித்திரபங்கம் என்னும் ஓர்வித கொடிய ரோயினால் எப்பொழுதுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சுரம் பிரமேகம் வெட்டைப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நரம்புகளுந் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை கால் அசதி, தேஹாசங்கை, இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோ தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், பாடலீசர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். தாருண்யசக்தியின் குறைபாட்டினால் ஏற்பட்ட பலவிதமான ரோகங்களினாலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பெரும் பிரகீர்த்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணஞ்செய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான என்று நாம் சொல்லவேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமையுள்ள குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும். பரிக்ஷை செய்யவும். உபயோகவிபரம் கூடவே வரும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் கிளம்பி பலவித இமிட்டேஷன் லேகியங்களையே டை சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறார்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களைத் தருவித்து மோசம்போய்விடாமல் நமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. டை முழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இரசமணி 1 இனாம்.

40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா	10—0—0
20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா	5—0—0
பரிக்ஷைக்கு 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா	3—0—0

வி. பி. தபால்செலவு முதலியன முழுபாகத்திற்கு அணா 12, அரைபாகத்திற்கு அணா 7, கால்பாகத்திற்கு அணா 5 பிரதியேகம். மருந்தின் கிரயத்தை முன்பணமாக அனுப்புகிறவர்களுக்கு போஸ்டேஜ் சார்ஜ் இனாம்.

ஓ கவனிப்பு:—பினாங்கு, சிங்கப்பூர், குவாலாலம்பூர், செட்டால், மோரிஸ் முதலிய வெளிப்பிர தேசங்களில் உள்ளவர்கள் மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணமாக மணியாடர் அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியே மருந்து பெறவேண்டும். நமது விலாசம்:—

ஹக்கீம், எம். முஹம்மது இபுறுஹீம் அன்ட் கம்பெனி,
மானேஜர், ஏ. முகம்மது யூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத யூனானி வைத்தியசாலை,
(Q. 63). பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).

[ESTABLISHED 1809]

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*SouthArcotDistrict*).

ஏஜண்டு தேவை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனாமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம்
சந்தோஷிக்கச் செய்வது
உத்தரவாதமுள்ளது.

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்த்தாரை பெருச[illegible]ல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பந்[illegible], SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகால் [illegible], மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், [illegible]சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த [illegible] வீரியவிர்த்தி, சந்தானவிர் [illegible] பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து [illegible] குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காக இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா	8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா	4—0—0.

வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபாற்செலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜ் ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனாமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினாலாவது முன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros,
Porto Novo.
(Y. 38).

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

ஒரு சாதாரணபொருளே

நோவுக்கான தைலத்தில் சுகந்தம்தேடமாட்டீர். அநேகமாய்ச் சுகந்தம் உண்டாக்குவதில் நோவை நீக்குங் குணம் மறைந்து விடுகிறது.

லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்

செய்வதில் சுகந்தமே வேண்டுமென்று எதுவுஞ் சேர்க்கவில்லை நோவைக் குணமாக்குஞ் சரக்குகளில் அவைகளின் குணத்தை விலக்கவில்லை. 12 திறமான சரக்குகள் சேர்ந்து அதி உயர்ந்த குணங்கள் வாய்ந்த தைலமே லிட்டில்ஸ் ஓறியன்டல் பாம். அதனால் அது உடனே கீல்வாயு, தடைக்குடைச்சல், இடுப்பு வலி, பாரிச வாய்வு வாதரோகம், மண்டையிடிப்பு முதலிய நோவுகளைத் திட்டமாய்க் குணப்படுத்துகிறது.

4—L—25.



(Y. 41. B.)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன ஞு
ஆடிமீ சகஉ திங்கட்கிழமை.

மதுக்கடைகளை அகற்றுதல்.

மதுபானத்தை யாழ்ப்பாணத்திலே முற்றாக ஒழித்துவிடல் வேண்டுமென்ற நோக்கத்துடன் இடையறாது உழைத்து வருபவர்களாகிய மத்திய மதுவிலக்குச் சங்கத்தாரின் அறிக்கைப் பத்திரம் இற்றைப் பிரசரத்திற் பிறிதோரிடத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றது. இச்சங்கத்தார் இரண்டுவருட காலமாகத் தாங்கள் செய்துவந்த முயற்சிகளையும் தவிர்க்கப்பட்ட மதுக்கடைகளையும் தவறணைகளையும் தவிர்க்கப்படாதிருக்கும் மதுக்கடைகளையும்பற்றி மிக விரிவாகக் கூறியிருக்கின்றனர். இம்மதுவிலக்குச் சங்கத்தார் "மெல்லெனப் பாயுந் தண்ணீர் கல்லையும் உருகப் பாயும்" என்றபிரகாரம் தங்கள் இடையறா முயற்சியினால் மெல்லமெல்ல இங்குள்ள மதுக்கடைகளில் நூற்றுக்கு முப்பத்தைந்துக்கு மேற்பட்ட விகிதமான கள் சாராயத் தவறணைகளை அகற்றிவிட்டார்கள். மதுபானங் காரணமாக இங்கே இற்றைக்குச் சில வருடங்கட்குமுன்னர் தரித்திரமுங் கலகமும் மலிந்திருந்தன; வியாச்சியங்களும் பகைமையும் அதிகப்பட்டன. ஆனால் 1924-ம் ஆண்டுப் பரிபாலன அறிக்கைப்பத்திரங்களிற் பொலிஸ்பகுதியாரும் மாகாணத் தலைவரும் வடமாகாணத்திலே குற்றங்கள் முன்னரைக்காட்டிலும் குறைந்துவிட்டனவென்பதை எடுத்துக்காட்டியிருக்கின்றனர். யாழ்ப்பாணப்பகுதியில் நீக்கப்படாது எஞ்சியிருக்குந் தவறணைகளும் விரைவில் நீக்கப்படுமேல் யாழ்ப்பாணம் தேவபூமியென்று சொல்லத்தக்க நாடாகுமல்லவா!

சென்ற வருடம் யாழ்ப்பாணப் பட்டினத்தைச் சேர்ந்த ஆறு தவறணைகளை நீக்க முடியாது மதுவிலக்குச் சங்கத்தாரும் மற்றும் அபிமானிகளும் பிரதிகூலமடைந்தமை உண்மையாகப் பெரும் மனவருத்தத்தைத் தருகின்றது. இத்தவறணைகள் நீக்கப்படாதொழிந்தமைக்குப் பல இடையூறுகள் உள்ளன. அவற்றுட் பிரதானமானவை சில வருமாறு:—

ஒன்றுக்கு மேற்பட்ட தொகையான தவறணைகளை ஒரேமுறையிற் சனசம்மதம்பெற்று நீக்குதல்வேண்டுமென அரசினர் விதித்த ஒழுங்கு எக்காலத்தும் அனுகூலமானதல்ல. சாராயக் குத்தகையை ஒருவருடத்திற்குமாத்திரம் விற்றுவிடாது மூன்றுவருடத்திற்கு விற்றுவிட்டமையினாலே குத்தகைகாரர்பலர் பெருந்தொகைப் பணஞ் செலவிட்டுத் தங்கள் தவறணைகள் தவிர்க்கப்படாதொழிதற்கான முயற்சிகளைச் செய்தனர். மரமேறிகளாயுள்ளவர்கள் தங்கள் பிழைப்புக் கெட்டுப்போய்விடுமென்ற அச்சத்தினால் தவறணைகள் வேண்டாமென்று சம்மதஞ் சொல்வதற்கு முற்பட்டு வாராதொழிந்தனர். இது மாத்திரமன்றி கள்ளுக்குத்தகை யெடுத்தும் கள்ளு விற்றும் பணம்படைத்த மாமேறிகள் தங்கள் இனத்தவர்களிடஞ் சென்று அவர்களையுஞ் சம்மதஞ் சொல்லப்போகவேண்டாமென்று தடுத்துவிட்டனர். மதுபானஞ்செய்யாதவர்களுள்ளுஞ் சிலர் அபிமானக் குறைவினாற் சம்மதஞ் சொல்லச் செல்லாது அலட்சியமாக வீட்டிலிருந்துவிட்டனர்.

முந்தி இருந்து பின்னர்ச் சனசம்மதம் பெற்று அகற்றப்பட்ட கள்ளுத் தவறணையைப் பின்னரும் வைத்தல்வேண்டுமென்று மானிப்பாய் சங்குவேலியென்னும் இரு இடங்களில் வசிக்கும் மதுவிடாய்கொண்ட சிலர் முயன்றனர். ஆனால் அவர்களுடைய முயற்சி வாய்க்கவில்லை ஒரு பிரிவில் முன்னர் இருந்து தவிர்க்கப்பட்ட மதுக்கடைக்குப் பதிலாகப் பின்னரும் மதுக்கடையையேனும் தவறணையையேனும் வைத்தற்கு அரசினர் ஒருபோதும் இடங்கொடுக்கவொண்ணாது. அங்ஙனங் கொடுப்பரேல் சனங்கள் நன்னோக்கத்தோடு மதுக்கடைகளைத் தவிர்த்தற்குப் பட்ட சிரமமும் செலவிட்ட பொருளும் அவமாகப் போய்விடுமல்லவா!

இலங்கையிலே விசேஷமாக யாழ்ப்பாணத்தில் மதுபானத்தை அறவே யொழித்துவிடுதல் வேண்டுமென்ற நோக்கங் கொண்டு மிக்க ஊக்கத்தோடு இடையறாது உழைத்துவரும் கௌரவ ஸ்ரீ சு. இராசரத்தினமவர்கள சென்ற வாரம் நிகழ்ந்த சட்டநிருபணசபைக் கூட்டத்திலே '1925-ம் ஆண்டு செப்டெம்பர்" 1உ தொடக்கமாக, இலங்கையில் எப்பகுதியிலாவது எவ்வகையான வெறிப்பதார்த்தங்களை விற்றற்கும் இந்தச் சட்டநிருபணசபையின் சம்மதமின்றி அரசினர் அனுமதி செய்யவொண்ணாது' என்ற ஒரு பிரேரணையை எடுத்தாண்டனர். இந்தப் பிரேரணை சட்டநிருபணசபையில் நிர்ணயமாக நிறைவேறும்வண்ணம் மேற்படி சபை அங்கத்தினரெல்லோரும் முயற்சி செய்தல் வேண்டும். இது நிறைவேறுமேல், போன இழவு மீண்டுவரப் போவதில்லை யென்றபடி தொலைந்துபோன கள் சாராயத் தவறணைகள் மீண்டுவரமாட்டாவென நாம் காத்திருக்கலாகும்.

மதுவிலக்குச் சங்கத்தாரும் மற்றும் அபிமானிகளும் எவ்வகையான சிரமத்தையும் பொருட் செலவையும் பாராட்டாது இடையறு முயற்சி செய்து இன்னும் எஞ்சியிருக்கும் மதுக்கடைகளை ஒழித்து அனுகூல முறுவார்களெனக் காத்திருக்கின்றோம்.

யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கம்.
பட்டின பரிபாலன சங்கத்தின்
எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக
ஸ்ரீ. மு. தாமோதரம்பிள்ளை
(மாமாத்தம்பி)யைத்
தயவுசெய்து
தெரிவு செய்யுங்கள்.
(Q 66)

பொலிசரின் அக்கிரம நிவாரணம்.

பெருங் குற்றச்சாட்டுகளின்பொருட்டு, பொலிஸ்டேசன்களில், அடைக்கப்படும் மனிதர், சில சமயங்களிலே, பொலிசரின் அக்கிரமங்களுக்கு ஆளாகுதல் வழக்கமாக இருக்கின்றது. காலந்தோறும் இதுவிஷயமாக அநேக சம்பவங்கள் வெளிவந்துள்ளன. இதனாலே பொலிஸ் வேலையிலுள்ள சிலருக்குத் தங்கள் கடமைகள் இன்னவை மாத்திரந்தான் என்பது செவ்வனே தெரியாதுபோற் காணப்படுகின்றது. பிழைகள் யாதும் செய்யும் காட்டுமக்களுக்கு, அக்கிரமங்கள் விளைத்தல் தங்களுக்குரிய கடமைகளுள் ஒன்று என்னுந் தவறான எண்ணம் இப்பொலிசர் சிலரிடத்து இருப்பதாக நாம் எண்ணக் கிடக்கின்றது. இந்த எண்ணமே இவர்களைத் தங்கள் கடமையினின்றுந் திறம்பச் செய்கின்றதுபோலும்! சில தினங்களின் முன்னர் மாபொலாயில் கொலைவழக்கை விளங்கிய நீதிபதி சமுகத்திலே "பொலிஸ்தானத்திலே சென்ற இரவு நான் சித்திரவதை செய்யப்பட்டேன்" என்று முதலாவது எதிரியும், "பொலிஸ் தானத்தில் நான் மிகுதியும் அடியுண்டேன்" என்று இரண்டாவது எதிரியும் கூறியதாக அறிந்துள்ளோம்.

ஆனால், கொலை முதலிய பாரதூரமான குற்றச்சாட்டுகளில் அகப்பட்டிருப்பதாகக் காணப்படுவோரிடமிருந்து உண்மை பெறுமாறு அனுசரிக்கப்படும் சமயோசித நடபடிக்கைகளையிட்டு நாம் யாதும் [illegible] ஆனால், இத்[illegible] அக்கிரமத்துக்குட்படுவோர் யாதும் குற்றங் குறையிலா நிரபராதிகளாகக் காணப்படின் இவர்கள் அனுபவித்த ஆக்கினைகளின் பயன் யாது? எனவே, இதனிலும் பெரிய கொடுமைதான் யாது? பொலிஸ்தானங்களிலே கொலை களவு முதலிய குற்றங்களிலே அகப்படுவோர் மாத்திரந்தான் அக்கிரமங்களுக்கு ஆளாகின்றனர் என்று இங்கு நாம் கூறுதல் முடியாது. நிரணமான குற்றச்சாட்டு, சந்தேகம் முதலியவைகளின் பொருட்டு, காவலில் வைக்கப்படுவோரும், இவர்களைப் பார்ப்பதன் பொருட்டுச் செல்வோரும் சில சமயங்களிலே பொலிஸ் அக்கிரமங்களுக்கும், அவமதிப்புகளுக்கும் ஆளாகின்றனர் என்றால் இதுவிஷயமாக நாம் இன்னும் கூறவேண்டியதென்னை? இத்தகைய சம்பவங்கள்பல, பொலிஸ்தானங்களிலே நடைபெற்றிருக்கின்றன இங்ஙனம், பொலிஸ்காவலில் வைக்கப்படுவோருக்கு இடையிடையே அங்கு விளைந்து வரும் அக்கிரமங்கள், அறவே யொழிந்துவிடற்குரிய சிறந்த முறைமையொன்று இலண்டனிலே கையாடப்படுவதாக நாம் அறியக்கிடக்கின்றது.

இந்த முறைமை பேச்சளவில் மாத்திரம் நின்றுவிடாது, செய்கையளவிலும் வந்துவிடுமாயின், அது நாட்டின் நலத்துக்குரிய நல்விஷயங்களில் ஒன்றெனவே நாம் அதனைக் கூறுவோம். நமது நாட்டிலே, மதிப்பிற்குரிய உத்தியோகங்கள் வகித்திருப்போருக்கும், ஏனைய சில தகுதிகள் உடையோருக்கும், அவரவர் தகுதிகளுக்கேற்ப அரசினராலே பட்டங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. நாம் அறிகின்றவகையில் இப்பட்டங்கள் நமது நாட்டிற்கு யாதும் நன்மைகள் விளைக்கக் கூடியனவோ வென்பது நமக்குத் தெரியவில்லை ஆனால், பொலிஸ்காவலில் அகப்[illegible]வோரை, ஆங்குநிகழும் அக்கிரமங்களி[illegible]ருந்து பாதுகாக்கும் பொறுப்பு வகிப்ப[illegible]ற்குரிய காலத்தின் சமீபத்திலே, சமா[illegible]ன நீதிபதியென்னும் பட்டம்பெற்றோர் [illegible]ப்போது இருக்கின்றனர் என்பதை [illegible]றியும்போது அது மிகுதியும் விரும்பத்[illegible]க்கதாக இருக்கின்றது. பொலிஸ் பகுதியாரால் விளையும் அக்கிரமங்களை விசாரணைசெய்து அறிக்கையிடும் பொருட்டுச் சிலகாலத்தின் முன்னர் ஓர் கழகம் நியமனம் பெற்றது. பொலிஸ்காவலிலே வைக்கப்படுவோரைச் சமாதான நீதிபதிகள் சென்று பார்வையிட்டு வரல்வேண்டுமென்றும், காவலில் வைக்கப்பட்டு இருப்போரின், உற்றார் உறவினர் ஒருவர் இருவர் அங்கிருக்க அனுமதிக்கப்படல் வேண்டுமென்றும் ஆனால், நியாயதுரந்தரர்கள் இவர்களின் பொருட்டு அங்குச் செல்லுதல் கூடாதென்றும் இவ்விசாரணைக் கழகத்தின் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதாக நாம் அறிகின்றோம்.

எனவே, பொலிஸ் அக்கிரமங்களை யொழித்துவிடுதற்கு இதனிலும் சிறந்த பிறிதொரு வழியிருக்குமென்று நாம்கருதவில்லை. விசாரணைக் கழகத்தார் தங்கள் கடமையை மிகவுந் திறமைபடச் செய்திருக்கின்றனரென்றே இதனால் நாம் கருதுகின்றோம். இத்தீர்மானம் உருப்பெற்று கூடிய சீக்கிரத்தில் கையாடப்படுமென்பது நம்பிக்கையாம். இதனாலே பொலிஸ் அக்கிரமம் ஒழிந்துவிடுவதுமாத்திரமன்று; பொலிஸ்காரர் சிலரும் இதன்மூலமாக சீர்திருத்தம் பெரிதும் அடைந்துவிடுவர் என்பதும் நமது கருத்து. சமாதான நீதிபதிகளுக்கும் இது ஓர் சிறந்த தேசத்தொண்டாக இருக்கும். அவர்களின் பட்டப்பெயருக்கு உகந்த ஓர் ஊழியமாக இது இருக்கும் என்பதற்கும் சந்தேகமில்லை. ஊரவர்கள் அடுத் தடுத்துப் பொலிஸ்பகுதிமீது குறை சொல்லுவதும் ஒழிந்துவிடும். பொலிஸ்காரருக்கும் சனங்களுக்குமிடையில் நம்பிக்கை ஏற்படும். இன்னும் பல நன்மைகள் இந்த முறைமை கையாடப்படுவதால் நமது நாட்டிலே யுண்டாவதற்கு ஏதுவாகும். எனவே, இத்தீர்மானம் காலதாமதத்தட் சிக்கிக்கொள்ளாது விரைவில் கையாடப்படுமென்று கருதுகின்றோம்.

"கிளேறிக்கற்" பரீட்சை

"யாழ்ப்பாணத்திலே முந்தி எப்போதாயினும் கிளேறிக்கற் பரீட்சை நடத்தப்பட்டதா? அப்படி நடத்தப்பட்டிருந்தால் இப்பொழுது ஏன் அரசினர் அப்படிச் செய்யாதொழிந்தனர். இப்பரீட்சைகளுக்குப் பிரவேசிக்கும் மாணுக்கருள் யாழ்ப்பாணத்தவர்களே மிகக் கூடிய தொகையினராகவிருத்தலால், கொழும்பில் யாதாயினும் கிளேறிக்கற் பரீட்சைநடக்கும்போது அதனை யாழ்ப்பாணத்திலும் ஏககாலத்தில் வைத்து நடத்தினாலென்ன?" என்ற இந்த வினாக்களை கௌரவஸ்ரீ. த மு. சபாரத்தினமவர்கள் சென்ற வாரம் கூடிய சட்டநிருபணசபைக் கூட்டத்தில் நிகழ்த்தினர். அதற்கு வித்தியாதிகாரியாகிய கௌரவமிஸ்ரர் மைககிறே "1906-ம் ஆண்டுவரையில் இப்பரீட்சைகள் யாழ்ப்பாணத்திலும் நடத்தப்பட்டன; அதன்பின் கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே போக்கு வரவு செய்தல் மிக வசதியாக வந்துவிட்டமையினால் கொழும்பில்மாத்திரம் இப்படிப்பட்ட பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. ஒரு இடத்திலேயே பரீட்சையை நடத்துவது மிகவும் வசதியாகும் மேலும் இப்படிப்பட்ட அபிமானமான பரீட்சைகள் ஒரேயிடத்தில் ஒரே மேற்பார்வையின்கீழ் நடத்தப்படுதலே நன்றும்; இக்காரணங்களினால் கிளேறிக்கற் பரீட்சைகளை இரு இடங்களில் வைக்கும் நோக்கம் அரசினருக்கு இப்பொழுதில்லையாம்" என்று பதில்கூறினர். கிளேறிக்கற் பரீட்சையை அரசினர் கொழும்பில் மாத்திரம் வைத்து நடத்துவதினால் தூரித்த ஊர்களில்-அவற்றுள்ளும் விசேஷமாக யாழ்ப்பாணத்தி லிருக்கும் மாணுக்கர்கள் அதிக சிரமத்திற்கும் பொருட்செலவிற்கும் உள்ளாகின்றனரென இப்பத்திரிகையில் முந்தியொரு சந்தர்ப்பத்தில் எடுத்து விளக்கியுள்ளோம். யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்குமிடையே போக்கு வரவு வசதியாயிருத்தலினால் யாழ்ப்பாணத்தில் இப்பரீட்சை வைக்கப்படவேண்டியதில்லையென மிஸ்ரர் மைக்கறே கூறுகின்றார். வடபகுதிப் புகைரதப்பாதை திறக்கப்படுதற்கு முந்தி கொழும்பிற்குச் செல்வதற்கு மூன்றுநாட் பிரயாணம் வேண்டியிருந்ததென்னும் வசதியீனமொன்றுமாத்திரமன்றிப் பிரயாணச் செலவும் கொழும்பிலே போய்த் தங்கிநிற்றற்காகிய செலவும் இக்காலத்தைக்காட்டிலும் முற்காலத்தில் எவ்வளவோ குறைவாக விருந்தன. அக்காலத்தைக்காட்டிலும் இக்காலத்திற் பதின்மடங்கு கூடியதொகை மாணவர் கிளேறிக்கற் பரீட்சையிற் பிரவேசிக்கின்றனர். இவர்களுள் நூற்றுக்கு 75 விகிதமானோர் யாழ்ப்பாணத்திலிருந்து செல்பவராவர். கொழும்பிலேமாத்திரம் இப்பரீட்சையை வைத்து நடத்துவதனால் யாழ்ப்பாணத்துள்ள மாணவர் பெரும் பொருட்செலவிற்கும் சிரமத்திற்கும் ஆளாகின்றனரென்பதே எங்கள் முறையீடாகும். கௌரவ ஸ்ரீ சபாரத்தினமவர்கள் கோள்கையு மிதுவேயாகும். மிஸ்ரர் மைக்கறே 'வசதி" அரசினருக்கன்றி ஊரவர்கட்கன்று. அரசினர் இந்த விஷயமாக வசதியீனப்படுகின்றார்களென்று நாமேனும் கௌரவ ஸ்ரீ சபாரத்தினமவர்களேனும் முறைப்படவில்லை. இனி, யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஏககாலத்தில் இந்தக் கிளேறிக்கற் பரீட்சையை வைப்பதினால் அரசினருக்கு யாதும் வசதியீனமில்லை. இங்கே நம்பிக்கையான உயர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களிருக்கிறார்கள். மிஸ்ரர் மைக்கிறேயின் விசுவாசமுள்ள உத்தியோகத்தர்களாகிய வித்தியாதரிசிகளிருக்கின்றார்கள். இந்த இருபகுதியாரும் இப்படிப்பட்ட பரீட்சைகள் இங்கே நடக்கும்போது சமுகமாகி மேற்பார்வை செய்தல் மிக வசதியாகும். இவ்வாறு யாழ்ப்பாணத்திலும் பரீட்சையை வைத்தலினாற் செலவு அதிகப்படுமேல் இப்பொழுதுள்ள கட்டணப்பணமாகிய 10 ரூபா போதாதாயின் இன்னும் இரண்டுரூபாவைக் கூட்டி விதித்தலாகும். இதனை விடுத்து, மரை கிடக்கு மிடத்திற்குச் சத்தியைக் கொண்டுபோவதற்குப் பதிலாகச் சத்தியிருக்குமிடத்திற்கு மரையைக் கொண்டுபோக முயன்றவாறு, பரிபாலன சேவைக்கென உயர்ந்த மாசவேதனத்தை ஊரவர்களிறுக்கும் வரிப்பணத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர்களுடைய வசதிக்காக ஊரவர்கள் பெரும் வசதியீனத்தைப் படுதல் சரியல்லவே. இந்த விஷயத்தையிட்டு கௌரவ ஸ்ரீ சபாரத்தினமவர்கள் இனிமேலும் வாதாடுவாரெனக் காத்திருக்கின்றோம்

மத்திய மதுவிலக்குச் சங்க அறிக்கைப்பத்திரம்.

சென்ற இரண்டுவருடகாலமாக மத்திய மதுவிலக்குச் சங்கத்தாரின் முயற்சி சனசம்மதம்பெற்றுத் தவறணைகள் நீக்கும் விஷயத்திலேயே ஈடுபட்டிருந்தது. அடிகிபகாட்டுக் குடிவகையை ஒழித்துவிடத் தொடங்கப்பட்ட கிளர்ச்சியானது திருப்திகரமான முடிவைக் கொடுத்திருக்கின்றது. ஆறு சாராயத்தவறணைகளும், பதினொரு கள்ளுத்தவறணைகளும், ஒரு அடிகிபகாட்டுக் குடிவகைக்கடையும் இவ்வருடத்திலே சனசம்மதத்துடன் நீக்கப்படவேண்டியிருக்கின்றன. பருத்தித்துறையிலுள்ள அடிகிபகாட்டுக் குடிவகைக் கடையையும், வல்லுவெட்டித்துறை பருத்தித்துறை காவெட்டி ஆகிய இடங்களிலுள்ள சாராயத் தவறணைகளையும், தனக்காரக்குறிச்சி பருத்தித்துறை கரவெட்டி அல்வாய்மேற்கு புலோலிதெற்கு வாரதுப்பளை முதலிய இடங்களிலுள்ள கள்ளுத் தவறணைகளும் நீக்கப்பெறுவதால வடமாராட்சி குடிவகையேயில்லாத இடமாக வருகின்றது. வடமாராட்சி மதுவிலக்குச் சங்கதாரின் மதிப்பிற்குரிய அருஞ்செயலின்பொருட்டு நாம் சோபனங் கூறுகின்றேம். மூடப்படவேண்டிய ஏனைய தவறணைகள் உரும்பராய் அராலி பழை முதலிய இடங்களிலுள்ளவையேயாம்.

உரும்பராய்த் தவறணை மூடப்படுவதால், வலிகாமம் கிழக்கு குடிவகை பூரணமாக நீக்கப்பட்ட இடமாய் விடும், பச்சிலைப்பளி யென்னும் பிற்போக்குள்ள பகுதியைப்போலவே, தேர்ச்சிபெறும் விஷயத்திலே சத்துராதியாகப் பழையிலுள்ள சாராயத்தவறணையும் இருக்கின்றது. பழை வண்ணான்கேணி, மாசார், வர்வணிகன்பற்று முதலிய இடங்களிலுள்ள நான்கு கள்ளுத்தவறணைகள் நீக்கப்படவேண்டியிருப்பதும் சந்தோஷத்திற்குரிய கருமமாகும். ஏனைய சிறுதொகையினவாய தவறணைகளும் நீக்கப்பட

(ஐந்தாம் பக்கம் பார்க்குக)

மாமிச போஜனம்
மனிதருக் காகாது.

அமெரிக்காவில் பிரபல வைத்தியசாஸ்திர பண்டிதராகிய டாக்டர் ஆர் எச பேர்க்ஸ் என்பவர் மாமிச போசனம் மனிதருடைய தேகத்திற்கு இசையாததென்னும் அபிப்பிராயமுடையவர். அந்த அபிப்பிராயத்தின் படியே தாமும் மாமிச போஜனத்தை ஒழித்துச் சைவ போஜனமே செய்து வாழ்கின்றார். அவர் தேகாரோக்கியமும் தேக புஷ்டியுமுடையவராக இருக்கின்றார் இப் பிரபல பண்டிதர் அமெரிக்காவில் போஜனக்ரம சங்கத்தார் ஒருவர் சைவ போஜன இயல்பைப்பற்றிச் சில விஷயங்கள் கேட்டபோது பின்வருமாறு கூறினார்.

1. ஒருவன் தன் ஆயுள் முழுவதும் தேகாரோக்கிய முடையனும் தேக புஷ்டியுடையனும் விவேகியாயும் இருக்க வேண்டினால், அவன் மாமிச போஜனத்தை அறவேயொழித்துச் சைவ போஜனங்களையே உட்கொள்ளல் வேண்டும். உயர்ந்த சன்மார்க்க முறையை அனுசரித்துப் பரிசுத்தமாகவும் மனித இயல்புக்கு இயைந்ததாகவும் உள்ள சைவ போஜனம் செய்வதொன்றே எங்கும் பரவி நிலைபெற்றிருப்பதற்குக் காரணமாகிய நன் மார்க்கமாம்.

2. உலகமெங்கும் பரவி யிருக்கும் வியாதிகளும் தேகதுர்ப்பலங்களும் வாயுரோக பாஷாண சம்பந்தமான வேறு பல வியாதிகளும் மாமிச போஜனத்தினாலேயே உண்டாகின்றன. அல்லது, மாமிசபோஜனஞ் செய்தவர்களாகிய பூர்வீகர்களுடைய வம்சத்திற் பிறப்பதனாலும் உண்டாகின்றன ஆயினும், முறையாகச் சைவபோஜனம் செய்துவரக் கூடுமானால் அவ்வியாதிகளெல்லாம் அறவே ஒழிந்து போம். நன்றாய்ச் சமைக்கப்படாததும் நோயுள்ளதுமாகிய மாமிசத்தைப் புசிப்பதனால் சொரி சிரங்கு முதலிய தொற்று வியாதிகள் உண்டாகின்றன.

3. இன்னும் ஆஸ்திரேலியா கண்டத்தில் உழைப்பாளிகளான பக்குவமடைந்த இளம் பெண்கள் மாமிசங்களை விசேஷமாகத் தின்பதனால் அவர்களெல்லாருக்கும் பெரும்பாடு என்னும் உதிரப்பெருக்கு நோய் உண்டாயிருக்கின்றது.

4. சைவ போசனத்தால் விளையும் நன்மைகளை நன்கு அறிந்த ஆங்கிலேய வைத்திய பண்டிதர்கள் எல்லோரும் தம் அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு அஞ்சுகிறார்கள்; மாமிச போசனத்தை நீக்கிவிடுவதனால் கேடுதியுண்டாகுமென்று நினைக்கும் ஜனங்களெல்லாரும் தம்மை அவமதிப்பார் என்றும், தமது பிழைப்புக்குக் குறைவு வருமென்றும் நினைப்பதினாலேயாம் இனி, இந்தத் தடைகள் எல்லாம் நீங்குமானால் அப்பண்டிதர்கள் தாராளமாய்த் தம் அபிப்பிராயங்களை வெளியிடுவார்கள்.

5. மாமிசத்தைப் புசிப்பதனால் அஜீரணம் உண்டாகி வாயு ரோகம் முதலிய பல வியாதிகள் உண்டாகின்றன. ஜீரணசக்தியை மிகவும் உண்டுபண்ணும் சைவபோஜனத்தினால் அவ்வியாதிகள் எல்லாம் ஒழிந்து போகின்றன.

6. பிரபல வைத்திய சாலைகளில் யாம் உத்தியோகம் செய்தபோது அங்கங்கு யாம் தேக பரிசோதனையின்பொருட்டு வியாதியஸ்தர்களின் தேகங்களைப் பதின்மூன்று வருஷ காலமாக ஏறக்குறையப் பதினாயிரம் பேர்வழிகள் வரையில் அறுத்துப் பார்த்தபோது அவர்களில் ஒருவராவது சைவபோசனஞ் செய்பவர்கள் அல்லர்; எல்லாரும் மாமிச பக்ஷிணிகள் தாம்.

7. சைவபோசனஞ் செய்பவர்களாகிய இந்துக்கள் இத்தகைய கொடிய வியாதிகளால் பிடிக்கப்படாது பெரும் பாலும் தேக ஆரோக்கியமுடையவராக இருக்கின்றனர்.

8. மாமிச போசனிகளுக்கு ஜீரணசக்தி குறைந்து போவதனால் அதனை நிவர்த்திக்கும் பொருட்டு மதுபானங்களை உபயோகப் படுத்துகிறார்கள். சைவ போசனம் செய்பவர்களுக்கு ஜீரணசக்தி குறைவு படாமையால் அவர்கள் மதுபான வஸ்துக்களை உபயோகிப்பதில்லை. நாம் அறிந்த மட்டிலும் சைவபோசனஞ் செய்பவர்களுக்கு மதுபான திரவியங்கள் கொஞ்சமும் வேண்டப் படுவதேயில்லை இதனால், சைவபோசனம் எங்கும் விருத்தியாகுமானால் மதுபான வழக்கம் அறவே ஒழிந்துபோம்.

லோகோபகாரி

ஒரு வேண்டுகோள்.

தமிழ்நாட்டுச் சகோதரிகட் குரியது.

(கல்லைபுரத்துக் கவுணியன்
வெண்ணெய்க்கண்ணனார்
"சிந்தாமணி" யென்னும் பத்திரிகையில்
வெளியிட்டது.

எனதுடன்பிறந்தீர்களே! உங்களையெல்லாம் வணங்கி நன்று மொழிந்து இரப்பேன். நீவிரெல்லாரும் ஆடவரோடு ஒப்புரிமை பெறுதற்கு இதுபோது முயன்றுவருகின்றீர்கள், அம்முயற்சி நல்லதொரு முயற்சியேயாகும், எனினும் நீவிர் கேட்கும் ஒப்புரிமையும் அந்த ஒப்புரிமை அளித்தற்குரிய ஆடவர்களும் இருந்துவரும் நிலைமை மிக்கதொரு பேதமைத் தாயிருந்து வருகின்றது என்று நான் திண்மையோடு உங்கள் முன்னிலையிலே அறிவிக்கின்றேன்.

ஒவ்வொரு நாட்டின் உயிரோட்டம் அவ்வந் நாட்டின் கல்வியிலே ஓடிக்கொண்டிருக்கின்றதென்னும் உண்மையை யாவர்தான் மறுக்கவல்லவர்? ஒவ்வொரு நாடும் தனக்குத்தனக்கென அமைந்த வெப்பதட்பங்களுக்கேற்பனவாகிய உணவு முதலியவற்றையும் அவ்வுணவுகளையுண்டு வருகின்ற உயிர்த்தொகுதிகள் அவ்வுணவிற்கேற்ற குணஞ் செய்கைகளையும் படைத்து வருகின்றனவென்பது உங்களுக்கு மட்டும் யாங்ஙனம் ஒப்பாகாதுபோகும்?

எனவே மக்களும் தாம் தாம் இருந்துவரும் நாட்டின் இயல்பிற்குத் தக்கபடி குணஞ்செய்கைகளைப் பழக்க வழக்க ஒழுக்கங்களின் வரலாற்றின் தொகுதியே அவ்வந்நாட்டிற்குரிய கல்வியென்றும், அக்கல்விக்கடலின் கரைகண்டவரே அவ்வந்நாட்டின் நலத்துறையனைத்து முடிக்கும் ஆற்றல் சான்ற புலத்துறை முற்றியார் அவர் என்றும் செவ்வனே விளங்கவில்லையா?

நம் நாட்டு ஆடவருள் நமக்கமைந்த உயிர்நிலைத்திருவமைந்த தமிழ்க்கல்வியிலே ஒருபகுதியையேனும் ஆழங்கண்டவரு முண்டோ? நாட்டுத் தொண்டர் என்று வீண்பெயர் புனைந்தவர். தமது மன்றத்திலே தமிழ்க்கல்வி கற்றற்குரிய துறைகளில் இதுகாறும் யாது முயற்சி செய்து வந்திருக்கின்றனர்? வீணே தொண்டரெனப் பெயர் புனைந்துகொண்டால்மட்டும் போதுமா? 'தாய்மொழிபயிலார்; தாய்மொழி பயிலும் ஆய்ந்தவர்க்கு அன்பு செய்து ஆவன புரியார்; தம் அரசவேட்டுத்தூசுய்ப் பல கூறுநர்' என்பது உலகியல் விளக்கம். இந்நிலைமையிலே ஆடவரெல்லாரும் இருந்து வரவும் அவரிடம் நீங்கள் ஒப்புரிமை பெறுதற்கு முன் வந்துள்ளீர்கள். பித்தரையொத்த இவர்கள் உங்களுக்கு எங்ஙனம் ஒப்புரிமை தரற்பாலர். அவர் பித்தினைத்தான் தருதற்கு உரியராவர்.

உடன் பிறந்தீர்களே! இப்பொழுதைய ஆடவர்கள் தம்மொழி கல்லாது அறிவுமந்தராகிப் பற்பலவாறு வாய்க்குவந்தபடியெல்லாம் பிதற்றியும் உறுப்புக்கு வந்தவாறெல்லாம் செய்கையுள் இறங்கியும் அலைந்து உழன்று வருகின்றனராதலின் அவர்கள் சென்ற துறையிலே ஆடுகள் போன்று நீவிரும் அலைந்துழல வேண்டாம். பராசக்தியின் அமிசமாகிய நீங்கள் அவளது அருளுக்குத் தகுந்த பாத்திரர்களாகி நற்றுறையிலே முற்றி முன்னுக்கு வருவீர்களாக.

நமது தாய்மொழிப் பயிற்சி பெறுதற்குரிய துறைகளுள்ளே ஒரு சிறிதேனும் அரசாங்கத்தார் பிரவேசித்திருக்கின்றனர். இந்நாட்டுத் தொண்டர் கல்விமுறையிலே எதையேனும் பற்றியிருக்கின்றனரா? நாட்டார் முன்னணியிலே வருதற்குரிய தொழில்வகைகளை அந் நாட்டுப்பாஷையிலே கொடாதுபோனால் அந் நாடு எப்படி முன்னேறும்? கிருஸ்துமடாதிபதிகள் உங்கள் நாட்டிலே நுழைந்தபோது உங்கள் தாய்மொழி வழியாகவே தங்கள் சமயத்தைக் கற்பித்தல் வேண்டுமென்று கருதிச் சில நூல்களைத் தமிழ்மொழியிலே இயற்றுவித்துத் தாமும் தமிழ்பயில்வாராயினர். அங்ஙனம்பயின்று உயர்ந்த நூல்செய்தவருள்ளே பெஸ்கி என்பவரும், போப்பையர் என்பவரும் தலைசிறந்தவராவர். இங்ஙனம் நமது மொழியை அணி செய்து வந்த இக்கூட்டத்தார், ஆங்கில மொழியிலும், ஆங்கில நாகரிகத்திலும் ஈடுபட்டு உருகிவரும் உங்களது அலங்கோல நிலையைக்கண்டு தங்கள் சமயத்தோடு பாஷையையும் எங்களிடத்திலே வேரூன்றச் செய்துவிடலாமென்னும் முழு நம்பிக்கை மேலிட்டால் முயன்றுவந்து இப்போது முழுப் பலனையும் அடைந்துவிட்டனர்.

நூறு வருஷகாலமாக ஆங்கிலத்துறையிலே உடல் பொருளாவியை ஒருங்கே உதவி வந்த உங்கள் ஆடவர்கள் அதன்கண்ணுள்ள சிறந்த நூல்களைத் தமிழில் இயற்றினர்களா? பௌதிக சாஸ்திரம், நாட்டுச் சாஸ்திரம், நாட்டவர் சாஸ்திரம், கணிதம், உடலமைப்பு முதலிய பற்பல சாஸ்திரங்கள் என்னும் இத்தொடக்கத்தனவாகிய சாஸ்திரங்களுள் ஒன்றையேனும் நன்றாகத் தரும் ஆற்றலில்லாத இவர்கள் தங்கள் பாழ்வயிறும் பேராசையும் காரணமாக அவ்வாங்கிலத்தைக் கற்றுவந்தனரேயன்றி நமது நாட்டை முன்னேற்றுவதற்கு ஒரு சிறிதும் முயன்றிலர் என்பதற்குச் சோதிடமும் பார்க்கவேண்டுமா? இத்தகையவரிடத்திலிருந்து நீங்கள் ஒப்புவமை பெறுதற்கு நினைந்துவிட்டீர்கள்! இனியேனும் இவ்வெண்ணத்தை அறவே ஒழித்துவிடுங்கள். இனியேனும் நீங்கள் செந்தமிழ்க் கல்வித்துறையிலே முன்னேறுங்கள். அந்தத் துறையிலே முன்னேறியவர்களே நாட்டுத் தொண்டிலும் முன்னணியிலிருந்து வரும் பேறு பெற்றவர்களாவர்.

இவ்வரிய பெரும் பேற்றினைப் பெறுதற்குரிய சில வழிகளை எண்ணித் தருகின்றேன். தமிழ்நாடு உய்யும்பொருட்டு அவதரித்தருளிய சைவத் திருவாளராகிய பாண்டித் துரைசாமித் தேவர் அவர்களாலே நிறுவப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே நாட்டப்பட்ட தமிழ் வகுப்பிலே தேர்ச்சிபெற்று இக்காலத்திற்கு இசைந்த துறைகளை முயன்று வருதலே அவ் வழி வகைகளாம்.

இக்காலத்திற்கு இசையாத பண்டைத்தமிழ் நூல்களைக் கற்பதினாலே ஒரு பயனும் இல்லையேயென்று இயம்புவீர்கள்போலும். நன்று நன்று நமது கூற்று. பழங் கணக்குகளை வரையறை செய்துகொள்ளாது புதுக்கணக்கு வைத்துக்கொள்வது முறையாகுமா? கொடுக்கல் வாங்கல் நிறைவேறுமா? பழந்தமிழ் நூல்களைப் படித்து ஆராய்ச்சி செய்து, கொள்ளுவ கொண்டு, தள்ளுவ தள்ளி, சேர்ப்பன சேர்த்தல் என்னும் இவையன்றோ நாட்டின் முன்னேற்றத்திற்குரிய நலந்தரும் வழி வகைகள். "தொன்மை மறவேல்" என்பது முதுமொழியன்றோ? ஆதலின் நீவிரெல்லாரும் பண்டைத்தமிழ்ப் பனுவல்களையெல்லாம் இகழ்ந்தொதுக்காது கற்றுத் தெளியுங்கள். தெளிந்த பின்னரே உங்களுக்கே இதுபோது இசைந்த துறைகளிலே செல்லுங்கள். சொல்வீர்களானால் உங்கள் தமிழ்த்தாயும் பற்பல புதுநலன் கனிந்து அணிவகைகளைப் புனைந்துகொண்டு உவகைகூர்ந்து உங்களெல்லாரையும் ஆசீர்வதிப்பாள். நீங்களும் நல்ல நிலைமையிலே வீற்றிருந்துகொண்டு நற்பேறுகளைப் பெறுவீர்களாக.

உங்களாலும் உங்களாடவர்களாலும் நமது தமிழ்த்தாய் ஒதுக்கப்பட்டு இருத்தலை நீங்கள் கண்கொண்டு பார்க்கலாகுமா? பெண்களுக்கு ஆடவரினும் இரக்கமுண்டென்ற இயம்புவார்களே? அதுவும் கலிகாலக் கொடுமையாலே மாறிப்போனது போலும்! நமது செயல்களை அயல் நாட்டார் அறிவரேல் நம்மை மக்கள் வகுப்பினராக நினையாது அருவருத்து ஒதுக்கி விடுவார்களன்றோ? உடன் பிறந்தீர்களே! எளியேன் வருத்தத்தோடு உங்கள் முன்னிலையிலே தெரிவித்துக்கொள்ளும் இவ்விண்ணப்பத்தைச் செவிசாய்த்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

நீங்கள் இத்துறையிலே முன்வருவீர்களேனில் உங்களையன்றே ஒப்புரிமை தருமாறு இந்நிலைகெட்ட ஆடவரெல்லாரும் இரந்து கேட்கும்படி வந்துவிடும். இதனைச் சிறிது கவனியுங்கள்.

உயிரும் உடலும்.

இப்பூவுலகில் மக்கள் பலர் வாழ்கின்றனர். மாக்களும் வாழ்கின்றன; புட்களும், புழுக்களும் புல் பூண்டுகளும் வாழ்கின்றன. மரஞ் செடிகள் தொட்டு மக்கள் ஈறாகவுள்ள அனைத்திற்கும் உயிரொன்று உண்டு; உடலொன்று உண்டு. உயிரிலாத உடலும், உடலிலாத உயிரும் இந்நில உலகில் வாழ முடியாது. உடலை விட்டு உயிர் நீங்குமானால் உடல் உபயோகமற்று உடனே அழிந்தொழிந்து விடுகிறது; நீங்கிய உயிருக்குத் தனித்தியங்கி விளக்கம் பெறும் ஆற்றல் கிடையாது. உயிர் மற்றொரு உடலோடு கூடியே தோற்றம் பெற முடியும்.

புல்லாதி எல்லாவற்றிற்கும் உடலுண்டு என்பது பல்லோர்க்கும் தெரியும். "அவைகள் நாமறியுமாறு பேசவில்லை; இயங்கவில்லையாதலின் உயிரேது?" என்று பலர் ஐயுறலாம். உயிர் அவற்றிற்கும் நன்றாக உண்டு என நமது நூல்கள் நவில்கின்றன. நூல்களில் நம்பிக்கை கொள்ளா மக்கள் இருக்கலாம். ....இதுபற்றிய ஐயப்பாடு எவர்க்கும் வேண்டுவதின்று. உயிர் எல்லாவற்றிற்கும் உண்டு. அவ்வுயிரை ஒன்று முதல் ஆறு வரைப் படிப்படியாகக் கூறும் நமது பனுவல்கள்.

நமது பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் இவற்றைக் கீழ்வரும் சூத்திரங்களான் முறைப்படுத்திக் கூறுகின்றது.

"புல்லு மரனும் ஓரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.
நந்து முரளும் ஈரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.
சிதலு மெறும்பும் மூவறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.
நண்டுந் தும்பியும் நான்கறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.
மாவும் மாக்களும் ஐயறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.
மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

என்பது தொல்காப்பியச் சூத்திரங்கள். புல்லும் மரமும் அவை போன்ற பிறவும் ஓரறிவுயிரென்பதும், நந்தும் (சங்கு) முரளும் (சிப்பி) இவைபோன்ற பிறவும் ஈரறிவுயிரென்பதும், சிதலும் (கறையான்) எறும்பும் இவைபோன்ற பிறவும் மூவறிவுயிரென்பதும், நண்டும் தும்பியும் இவைபோன்ற பிறவும் நான்கறிவுயிரென்பதும், மாவும் (விலங்கு) மாக்களும் (மாக்குணம் படைத்த மக்கள்) இவைபோன்ற பிறவும் ஐயறிவுயிரென்பதும், மக்களும் இவர்போன்ற பிறரும் இவர் போன்ற அறிவுடைய பிறவும் ஆறறிவுயிரென்பதும் இவற்றின் பொருள். குறித்தவற்றில் ஓரறிவாகக் குறித்தன உணர்ச்சி மட்டும் உடையன எனவும், ஈரறிவென்றவை அவ்வுணர்வோடு சுவையறிவும் உடையனவெனவும், மூன்றறிவாகக் கூறியன அவற்றோடு நாற்றங் காணும் அறிவும் உடையனவெனவும், நான்கறிவாகக் கூறியன அம்மூன்றினோடு கண்ணறிவும் பெற்றனவாகவும், ஐயறிவென்றவை அவற்றொடு செவியறிவும் பெற்றனவாகவும் மக்கள் முதலியோர் ஆறாவதாகிய பகுத்தறிவும் பெற்றோராகவும் கொள்ளப்படுகின்றன.

உயிரைத் தாங்கி நிற்பது உடல். உயிரும் உடலும் வெளித் தோற்றத்திற்கு ஒன்றாகவே காணப்படும். உயிர் வேறு; உடல் வேறு. உடல் தான் கண்முன் தோன்றும். உயிரைக் கண்ணால் காணமுடியாது. உடலினுள்ளே இருக்கும் உயிர். அதைப் பகுத்தறிவு என்ற கருவி கொண்டே காண்டல் வேண்டும். இதனைக் காணும் அறிவு மக்கள் உலகத்திற்கே உண்டு. அவருள்ளும் ஒரு சிலருக்கே உடல் வேறு உயிர் வேறு என்று காணும் அறிவு இருக்கிறது. இவ் உண்மையை மக்கள் அனைவரும் கண்டார்களானால் உலகில் தீமையே நிகழாதென்று திண்ணமாகக் கூறலாம்.

இதனை உணரவேண்டுவது மக்கட்கு இன்றியமையாக் கடன். இதன் பொருட்டே மக்கட்கு ஆறாவது அறிவு தரப்பட்டது. இவ்வறிவு பெறார் மக்கள் யாக்கை பெற்றிருந்தாலும் மக்களல்லர்; மாக்களே என்று ஆசிரியர் தொல்காப்பியனார் சொல்லுகின்றார். உடல் வேறு உயிர் வேறு என்று மக்கள் அறியவேண்டிய இப்பொருளை அறிந்தார்களானால் அறிந்தபடி ஒழுகுவார்களானால் உலகில் தீமையே நிகழாது.

உடலைத் தானென எண்ணியே மக்கள் தீமை புரிகின்றனர். உடலின் பொருட்டாகவே இவ்வுலகில் எல்லாம் நிகழ்த்துகின்றனர். உயிரைத் தானென எண்ணுவாரானால் அதற்குரிய செயல் புரிவரன்றோ? உயிர்க்குறுதி நாடுங்கால் தீயன நிகழா. ஒரு மகன் தன்னுடலைக் காத்தற்காக--தன் மனைவி மக்கள் உடல்களை ஓம்புவதற்காக—தாங்கள் நன்றாக வாழ்தற்காக, உலகத்திலுள்ள பிறரையெல்லாம் தன்னால் ஆனமட்டும் துன்புறுத்திப் பொருளைச் சேகரிக்கின்றான்; பிறவற்றைச் செய்கின்றான். அங்ஙனமே ஒரு மகளும் தன்னுடலையும் தன் கணவன் மக்கள் முதலானோர் உடலையும் வளர்ப்பதற்காக எவ்வளவோ காரியங்களை ஆற்றுகின்றாள். இவர்கள் உண்மையில் உயிரளவில் யாருக்கு யார் மனைவி மக்கள்? உயிருலகில் கணவன் ஏது? மக்களேது? தாய் ஏது? தந்தை ஏது? சுற்றமேது? ஆண் ஏது? பெண் ஏது? உயிரில் கணவனுயிர் மனைவியுயிர் உண்டோ? ஆண் உயிர் பெண் உயிர் உண்டோ? இல்லை! இல்லை!! இல்லை !!!

உயிரெல்லாம் ஒன்றே. உயிரில் வேறுபாடே யில்லை. புல்லுள்ளிருப்பதும் மாக்களுள்ளிருப்பதும் மக்களுள்ளிருப்பதும் ஆணுள்ளிருப்பதும் பெண்ணுள்ளிருப்பதும் எல்லாம் ஒரு தன்மைத்தாய உயிரே. இன்று புல் யாக்கை பெற்ற ஒரு உயிர் பின்னர் மக்கள் யாக்கை பெறுதலும், இன்று விலங்கு உடல் பெற்ற ஒருயிர் நாளை மக்கள் உடலையோ அன்றி தாழ்ந்த தேகத்தையோ தாங்குதலும், இன்று மக்கள் யாக்கை பெற்ற உயிர் பிற்றை மிகவும் தாழ்ந்த உடம்பு பெறுதலும் உண்டு. பிறவி செய்வினைக் கேற்றது. உடல் அழியுந் தன்மை வாய்ந்தது. உயிர் அழியாத் தன்மை பெற்றது.

மக்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும் இப்பொருளை. உடலை என்றென்றும் நிலைத்திருக்கச் செய்ய ஒருவராலும் இயலாது. உயிரை அழிக்கவும் எவராலும் கூடாது. இவ்வுண்மை உணர்வோர் உறு கடனாற்ற விரைந்துவிடுவர். இவர்களே சிறந்த மக்கள். இவர்கள் எல்லா உயிரையும் பாகுபாடின்றி ஒன்றாகப் பார்ப்பார். உயிரில் பேதமில்லையென்பதை உணர்ந்தார். உடல் பேதத்தைப் பாராட்டமாட்டார். ஏன் நெறி கடந்து பலப்பல காரியங்கள் செய்தல் வேண்டும்? இவ் உடலோடு கூட உயிர் எவ்வளவு காலம் சேர்ந்திருக்கப்போகிறது? இவ்வளவு காலமென்று வரையறுத்துக் கூற முடியுமோ! இன்று பிரிந்தாலும் பிரிந்துவிடும். நாளைப்போனாலும் போய்விடும். பிறகு மற்றொரு உடலைச்சாரும். இந்த மனைவி மக்களை எத்தனை நாட்கள் இவ்வுயிர் பெற்று வாழப் போகிறது? இவ்வுடல் உள்ளவரைதான். உடலோ எந்தக் கணத்தில் அழியுமென்று நிச்சயமாகக் கூடக் கூறக் கூடாததாகவிருக்கிறது.

உயிர் இதைப்போல எத்தனையோ உடல்களை எடுத்திருக்கிறது; எத்தனையோ மனைவியை-மக்களை-தாயை-தந்தையைப் பெற்றிருக்கின்றது. நாள்தோறும் புதிய ஆடை அணிந்து பழைய உடை களைதல் போன்றது உயிர்கள் உடல்விடுத்து உடல்கொள்ளுதல். இதற்குள் இந்த உடற்பற்றுக் கொண்டு ஏன் தீமைகள் புரிதல் வேண்டும்?

உலகம் ஒரு நாடகமேடை. அம்மேடையில் உயிர்கள் ஆண் பெண் என்று வேடம் புனைதலாகிய உடல் தாங்கி நடிக்கின்றன. நாடகக் காட்சி முடிந்தவுடன உடலாகிய வேடத்தைக் களைந்து விட்டுச் சென்றுவிடுகின்றன. நாடகமேடையில் ஒருவர் ஆண்வேடம் பூண்டுவருகின்றார்; மற்றொருவர் பெண்வேடம் பூண்டு வரு

கிறார். உண்மையில் கணவனைப் போலவும் மனைவியைப் போலவும் ஆண்டு நடக்கின்றனர் அவ்வரங்கத்தை விட்டிறங்கினால் கணவனாகவும் மனைவியாகவும் கருதுகின்றார்களோ? அவ்வரங்கத்திலும் இவர்கள் நடிக்கின்றார்களே தவிர உள்ளத்தில் அவ்வாறு கருதிக்கொள்தல் உண்டோ? இல்லையே அவ்வாறுதான் இதுவும். யாருக்கும் யாரும் உறவில்லை. எல்லம் இறைவனின் திருவிளையாடலே இவ்வுண்மை ஓர்ந்தார் எவ்வுயிர் மாட்டும் ஒரே படித்தாக அன்பு செலுத்துவர்.

அந்தோ! உடலையே உயிரெனவும் அது அழிவிலாததுபோலவும் மயங்கியே மக்கள் வினையாற்றுகின்றனர். இது பெரும்பிழை! பெரும்பிழை!! மக்களாய்ப் பிறந்தும் உண்மை உணராமையாலே அநேகர் பிறவிப் பயனை யிழந்து இழிந்த பிறவியை எய்துகின்றனர். இந்தப் பாழும் உடல் மிகவும் கெட்டது; அதனிடத்துப் பெரிய தீக்குணம் ஒன்றிருக்கிறது. அது உயிர் தன்னோடு கூடி வாழும் வரை உயிரைத் தனக்கு வேண்டிய எல்லாம் செய்யச் சொல்லும்; தன் பொருட்டுப் பிற உயிர்களை யெல்லாம் துன்புறுத்தச் சொல்லும்; தன் வாழ்வில் தான் அதற்குக் கவலை; மற்றவர் எவ்வாறு போனாலும் அது பொருட்படுத்தாது. இவ்வளவையும் தனக்காகத் தன்னோடு சேர்த்த உயிரைச் செய்யச் செய்துவிட்டு இறுதியில் தான தன் தன்மைக்கேற்ப மாளும் பொழுது, தன் பொருட்டுத் தான் செய்யுமாறு தூண்டியதால் அவ்வுயிர் செய்த பாபங்களைத் தான் வாங்கிக்கொள்வதில்லை. மாண்டு தொலைகின்ற அது தான் மாளும்பொழுது இவற்றையும் கொண்டு சென்றால் என்ன? அது அவ்வாறு செய்வதில்லை. என்றும் அழிவிலாதிருக்கிற அந்த உயிர் உடலை விட்டுச் செல்லும்பொழுது, தான உடலோடு கூடி வாழ்ந்த காலத்திற் செய்த பாப புண்ணியங்களைத் தூக்கிக்கொண்டு செல்கிறது. அவற்றின் பயனை உயிர் அனுபவித்துத் தீரவேண்டும். உயிருக்குப் புண்ணியத்தைத் தேடிக் கொடுக்கும் நல்லுடலும் உண்டு. அது மிகச்சிலவே. எனவே பாபமாயினும் புண்ணியமாயினும் அவ்விரண்டும் உயிரைச் சேர்தலை "பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாபமுமே" என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு.

புண்ணியம் செய்யத்தக்கது; பாபம் செய்யத்தகாதது. பாப காரியத்தை ஏன் செய்கின்றோமென்று ஆராயும்பொழுது, உடலின் பொருட்டாகவே எனபது கிடைக்கும். உடல் அழியுந்தன்மை வாய்ந்தது; உயிர் அழிவில்லாதது. உடலின் பொருட்டுச் செய்யப்பட்ட பாபத்தை இறுதியில் உயிர் ஏற்றுக்கொள்ள வேண்டுவதாகிறது. இந்நிலையில் பாபகாரியத்தை ஏன் செய்து அல்லலுறவேண்டும்.

உயிரின் பொருட்டு மறஞ்செய்ய நேராது. மறஞ்செய்வதெல்லாம் உடலின் பொருட்டே. எனவே உடல் வேறு உயிர் வேறு என்பதை உணர்ந்து; அழியுந்தன்மை வாய்ந்த உடலின் பொருட்டு மறத்தைச் செய்து அழிவிலா உயிரையும் இன்னலுக்குள்ளாக்காமல் உயிருக்கு உறுதுணையாகிய நல்லறமாற்றி மக்கள் உய்வாராக!

—ஊழியன்.

ஆறுமுகநாவலரவர்கள்
அச்சிற்பதிப்பித்த
தமிழ்ப் புத்தகங்கள்
வண்ணார்பண்ணையில்
இனி
சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார்
அவர்களிடம்
விலைக்குப் பெற்றுக்கொள்ளலாகும்.

1-6-25. ச. விசுவநாதபிள்ளை.
(Mis. 657.)

"சேலம் பனியன்கள்"
உறுதியானது விலைசரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது,
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

கே. வி. ருஜாலு ஐயர்,
புரோப்பரைட்டர்,
ரூபல் நிட்டிங்பேக்டரி,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
(H 40) S. இந்தியா.

விளம்பரம்.

பினங்கு தீ. சொ. கடையிலிருந்தும், சிங்கப்பூர் தீ. சொ. கடையிலிருந்தும் இவ்விடம் யாழ்ப்பாணம் கு. வெ. கடையிற் பணம் வாங்கும்படிவந்த உண்டியல்களில் மேற்படியார் பணம் கொடாத உண்டியல்களுக்கு இவ்விடம் பிரு. பிசு. கடையில் பணம் கொடுக்கிறதாக ஒப்புக்கொண்டிருக்கிறபடியால் மேற்கண்ட இரண்டேர்களிலுமிருந்து வந்திருக்கிற உண்டியற்காரர்கள் ஷை பிரு. பிசு. கடையில்வந்து பணம் வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீ. சொ. கணக்கு தியாகராசபிள்ளை.
வண்மேற்கு,
27-7-25.
(Mis. 684.)

ஆப்ரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய்விட்டது.

கேஸரியின் விலையுயர்ந்த ஒளஷதங்களின் குணத்தை மிகவும் மெச்சினேன் 'லோத்ரா'வைப்பற்றி என் அனுபவத்தைக்கீழே குறிப்பிடுகின்றேன். அதற்குச்சமமான ஒளஷதம் பூலோகத்தில் வேறெதுவுமில்லையெனத்திண்ணமாய்க் கூறுவேன். என்மனைவிக்கு வயிற்றில் இடதுபாகத்தில் ஒருவிதமான வலி இருந்து வந்தது மேனாட்டு (இங்கிலீஷ்) வைத்தியம் எல்லாம் பிரயத்தனப்பட்டுக் குணமடையவில்லை. பின் ராஜமந்திரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனதில் உடனே கர்ப்பப்பையில் சாஸ்திர சிகிச்சைசெய்யவேண்டு மென்றார்கள். இது என் மனைவிக்குச் சம்மதமில்லாததால் பெருங்கஷ்டத்துடன் ஊர் வந்துசேரும் தருணத்தில் வரப்பிரசாதிபோல் "லோத்ரா" ஞாபகத்திற்கு வந்ததால் சென்னைக்கு ஆபரேஷனுக்கு வருமுன் இதை உபயோகித்துப் பார்க்க எண்ணங் கொண்டவனாய் தந்திமூலமாய் ஆடர் கொடுத்து ஒளஷதத்தை தருவித்துக்கொண்டு முதல்வேளை மருந்து கொடுத்த மாத்திரத்திலேயே குணம் காண ஆரம்பித்தது இரண்டாம் வேளை மருந்து கொடுத்தவுடன் 8-மணிநேரம் நல்ல நித்திரைசெய்தாள். மறுபடி மூன்றாம்வேளை மருந்து மறுநாள் கொடுத்த மாத்திரத்தில் வலியெல்லாம நின்றுவிட்டது. நாளுக்கு நாள் சுகமடைந்து வந்தாள். சத்தியமாய் "லோத்திரா" வினால் ஆபரேஷனில் தான் நிவர்த்தியாக வேணுமென்று இங்கிலீஷ் டாக்டர்கள் சொன்னவியாதி ஆபரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய் விட்டது என்று காக்கிநாட, கோதாவரி டிஸ்டிரிக்டு போர்ட் இஞ்சினியர் ஆபீஸ், மகா-ா-ா-ஸ்ரீ பி சுப்பராயுடு அவர்கள் எழுதுகிறார்.

இந்த ஒளஷதத்தைப் பற்றிய புத்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

"கேசரி குடீரம்"
ஆயுர்வேத ஒளஷதசாலை,
எழும்பூர், மதராஸ்
(Y 35 B)

சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (குலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்ரர் மைக்கோயின் "சுரசங்காரி" ஒளஷதம் உடனே மாற்றிவிடும். டக்ரர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம்மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. Y 47

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்கிழக்கு செ. நா. செ. சாமிநாதச்செட்டியாரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம்பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

இல	வ.	ருபா.	ஊர் பெயர்	நகைகளின்விபரம்.
1924 ஆ ஜூன்வீ.				
3606	14	200	தட்டாதெரு செல்வத்துரை பொன்னுத்துரை	சிகப்புக்கல் தோடுசோடி 4 நீல வெள்ளை தோடு சோடி 1
3611	14	40	கொக்குவில்மேற்கு தாமோதரம்பிள்ளை பொன்னையா	பொன் சிகப்புக்கல் மோதிரம் 1 நீலக்கல்மோதிரம் 1 அரும்புத் தடை 1 குதிரை முழுத்தங்கப்பவுண் 1
3613	15	100	கொட்டடி ஆறுமுகம் பரமநாதன்	பொன் கல்முகப்புவைத்த செட்டிக்கொலுசுக்காப்புச்சோடி 1
3632	16	300	தட்டாதெரு செல்லத்துரை பொன்னுத்துரை	சிகப்புகல் பதக்கம் 4 தோடு சோடி 2
3658	18	90	சிறும்பியடி கந்தையா சுந்தரம்பிள்ளை	பொன் கொலுசுக்காப்புச்சோடி 1 அட்சரக்கூடு 1
3662	18	100	கொக்குவில் சுப்பர் கந்தையா	பொன் பட்டணக்காப்புச்சோடி 1 ஒற்றைப்பட்டுருண்டுச்சங்கிலி 1 சில்மோதிரம் 1 வெள்ளியில் பொன்போட்ட கொண்டைப்பூ 1
3680	19	95	கன்னாதிட்டி கண்ணுச்சாமிப்பத்தர் அங்கமுத்துப்பத்தர்	பொன் பட்டணக்காப்புச் சோடி 1
3691	21	40	அல்லைப்பிட்டி மோசேசு செல்லப்பா	பொன் கம்பிப்பூராணட்டியல் 1
3734	25	15	சிவன்கோயில் வடக்குவீதி கதிர்காமு கந்தையா	சிகப்பு பச்சைக்கல்வைத்த மோதிரம் 1
3739	25	20	திருநெல்வேலி ஆறுமுகம் சமரிவாயம்	பொன் கம்பிப்பூராணட்டியல் 1
3741	25	16	கரையூர் செல்லத்தம்பி பெண் செல்லமுத்து	இளக்கப்பொன நாகபடம் சோடி 1 காட்டுக் கிளிக்கல் சோடி 1 வெள்ளி அரைஞாண்கொடி 1
3753	26	12	கரையூர் தேவசகாயம்பிள்ளை கைம்பெண் விக்டோரியா	வெள்ளி ஒட்டியாணம் 1 காற்சங்கிலி சோடி 1
3771	28	90	வண்கிழக்கு தட்டாதெரு முருகேசு பொன்னையா	பொன் கம்பிப்பூராணட்டியல் 1 சங்கிலி 1 கல்வைத்த கவுத்தோர் 1 வெள்ளியால் பொன் போட்ட கொண்டைப்பூ 1
3782	29	220	தட்டாதெரு செல்லத்துரை பொன்னுத்துரை	சிகப்புக்கல் தோடுசோடி 5 புலிருச்சு 1
3783	29	40	கரையூர் முதலி ஆசீர்வாதம்	பொன் பட்டணக்காப்புச்சோடி 1
ஜூலைவீ.				
3807	2	60	மண்டைதீவு செல்லத்தம்பி வேலுப்பிள்ளை	பொன் தாலிக்கொடி 1
3825	3	56	வண்கிழக்கு சின்னச்சாமி செல்லையா	பொன் கல்முகப்புவைத்த கொலுசுக்காப்புச் சோடி 1
3836	5	150	சுண்டிக்குழி பேதுருப்பிள்ளை வைத்தியாப்பிள்ளை	பொன் பீலிக்காப்பு சோடி 1 பிள்ளைக்காப்புச்சோடி 1 சங்கிலி அட்டியல் 1 கல்வைத்த கவுத்தோர் 1 சரட்டட்டியல் 1
3837	5	500	சுண்டிக்குழி நல்லதம்பி செல்லையா	பொன் [illegible] 80 [illegible] 1
3838	5	100	ஷை ,, ,,	பொன் கல்முகப்புடன் பூக்காப்புச் சோடி 1
3859	7	250	வண்மேற்கு கதிர்வேல் கந்தையா	பொன் பட்டணக்காப்புச் சோடி 1 செட்டிக்காப்புச்சோடி 1 கம்பிப்பூராணட்டியல் 1 சிகப்புக்கல் தோடு சோடி 1
3875	8	75	சோனகதெரு மம்மது மீருலெவ்வை முகைதீன்பிச்சை	பொன் கொலுசுக்காப்புச் சோடி 1
3876	8	140	வண்கிழக்கு சின்னச்சாமி செல்லையா	பொன் பதக்கத்துடன் செட்டிப் பூராணட்டியல் 1
3878	8	130	சந்தர்மடம் இளையதம்பி விநாசித்தம்பி	பொன் தாலிக்கொடி 1
3883	8	35	மண்டைதீவு வெற்றிவேல் சாத்திசேகர இ.	பொன் சரட்டட்டியல் 1, மருக்கன் சிகப்புக்கல் தோடு சோடி 1
3885	8	80	சோனகதெரு சுலைத்தான் அப்துல்காதர் மம்மது இ	பொன் சவடி 1 கொடி 1 கம்பிப்பூராணட்டியல் 1
3931	12	25	நாவாந்துறை சீக்கிலைப்பிள்ளை வயித்தியாப்பிள்ளை	இ [illegible] 1
3947	13	18 50	கன்னூர் கார்த்திகேசு சுந்தரம்பிள்ளை	இமிட்டேசன் பதக்கம் 1, வெள்ளியால் பொன் போட்ட கொண்டைப்பூ 1
3951	13	80	சங்குவேலி இராமலிங்கப்பத்தர் கணபதிப்பத்தர்	பொன் செட்டிக்காப்புச்சோடி 1
3964	14	12	வசாவிளான் வயிரமுத்து ஏகாம்பரம்	பொன் மோதிரம் 1
3971	15	80	நீர்வேலி சின்னப்பு காசலிங்கம்	பொன் பூக்காப்புச்சோடி 1

விற்பனவு: குரோதன ஹு ஆடிமீ 24உ (8—8—25) சனிக்கிழமை பகல் 10 மணிக்கு மேல் எடுபட்ட நகை பிரசித்தமாக ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 685)

25-8-23-ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் & கண்காட்சியில் இவர் மருந்துகள் தேவ ஒளஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதிப்பட்டமும் பெற்றவர்.

உலகெங்கும் புகழ்பெற்று அநேக பரிசுகள், நற்சாக்ஷிகள் பெற்றது!

நமது ஜீ. ஏ. மாத்திரை 50 வாங்குவோர்கட்கு ரூபா 2 விலையுள்ள "மாந்திரீக ரக்ஷை" ஆர்டருடன் தேவை என்று எழுதுபவர்கட்கு மட்டும் இனமாய் (1) அனுப்பப்படும்.

இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட ஆறுமணி நேரத்தில் கொடுக்கும்.

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை (கைகண்டது)

இதுவரையிலும் எவராலும் கண்டு பிடிக்கப்படாத ஓர் அபூர்வ மருந்து.

அபூர்வசக்தி வாய்ந்தது! ஆச்சரியகுணமுள்ளது!! இதை ஒரு முறை பரீக்ஷை பாருங்கள்

வீரியத்தைக் கெட்டிப்படுத்தும்; தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையிற் பரீக்ஷை பார்க்கலாம்! பத்தியமில்லை.

150-பில்ஸ் ரூ. 10-0-0 50-பில்ஸ் ரூ. 4-0-0 20-பில்ஸ் ரூ. 2-0-0 வி. பி சார்ஜ் வேறு.

நற்சாக்ஷி மதராஸ் S. ஸ்ரீனிவாஸய்யங்கார் எழுதுவதை கவனியுங்கள்.

பலஹீனம் நரம்புத்தளர்ச்சி ஞாபகசக்திக்குறைவால் வருந்திக்கொண்டிருந்தேன் அதற்காக நான் அநேக டாக்டர்களிடம் சாப்பிட்டு ஒன்றிலும் குணபடவில்லை. தங்கள் ஜீ. ஏ. மாத்திரைகளைச் சாப்பிட்டு பூர்ண சுகம். வேண்டியவர்கள் இந்த அருமையான மருந்தை வாங்கி மருந்தித் தேசத்தைப்பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே எமதுவிருப்பம். (இதற்கு கியாரண்டீ கொடுக்கப்படும்).

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், குத்து உடனே தீர்க்கும் புட்டி ரூபா 2-0-0.

நற்சாட்சி:—கண்டி, சிலோன் கு. மதார்சாய்பு எழுதுவதைக் கவனியுங்கள்.

உங்கள் பிரமேகநிவாரணியைச் சாப்பிட்டதில் ......உடம்பு இப்போது பூரணசுகம். இன்னொரு ஆளுக்கு வேண்டியதாயிருக்கின்றது. ஒரு புட்டி உடனே அனுப்பவும்.

புஷ்பிக ரோஸ் பற்பொடி.

பொறுக்க முடியாத பல்வலியை ஒருநொடியில் நிறுத்தும். பல்வலி, பல்லரணை, எகிர் கரைவு, எகிர் வீக்கம், புழுக்குடைச்சல் முதலிய வியாதிகளை நீக்கி ஆயுள்பரியந்தம் தந்தரோகம் அணுகவொட்டாது. 4 டின் ரூபா 1. டஜன் ரூபா 2-8-0 பெரியபாக்கெட் 1-க்கு ரூபா 2-0 0 வியாபாரிகளுக்கு 6-டஜன் ரூபா 13-0-0 12 டஜன் ரூபா 25. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

5-7-22-ல் சுதேசமித்திரன் தங்கள் பேப்பரில் வெளியிட்ட அபிப்பிராயம்:—பல்துலக்குவதற்கு ரம்மியமாயும் நல்லவாசனையுடனிருக்கின்றன, வேணடுபவர்கள் பழனி, டி. ஆர். கெ. இடம் பெற்றுக்கொள்க.

கெர்ப்ப சஞ்சீவி எண்ணெய்.

பஹிஷ்டை காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை மிக்க ஆச்சரியமாய் அந்தக்ஷணமே நிறுத்தும் காலாகாலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். பலஹீனம், மலபந்தம், சரீரம் இளைக்கும் தன்மை கெர்ப்ப ரோக சம்பந்தமான சகலவியாதிகளையும் நீக்கும். புட்டி ரூபா 2.

மாந்திரீக ரட்சை.

இதை அணிந்து கொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்தகாரிய சித்தி, புத்திரசந்தானம், தொழில் அபிவிருத்தி, உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு அணுகாது; குழந்தைகளின் பிணிமுதலியன நீங்கும். ரக்ஷை 1-க்கு ரூபா 2. ரக்ஷை 6-க்கு ரூபா 9. முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதை செய்தனுப்பப்படும் ரக்ஷை ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேசவாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2 ம் சேர்த்து முற்பணம் அனுப்பினால் மாத்திரம் மருந்து அனுப்பப்படும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.

Q 56. A.)

நீடித்தகாலம் பிடியாது. அரசாட்சி தனது தளரா முயற்சியினாலே தவறணை நீக்கஞ் செய்துகொண்டது. ஆனால் பண்டத்தரிப்புத் தவறணை விஷயமாக இன்னுமோர்முறை சனசம்மதம் பெறல்வேண்டியிருக்கின்றது. பண்டத்தரிப்புத் தவறணையின் பொருட்டு ஏலவே எடுத்த சனசம்மதத்திலே அது அருந்தப்புப் பெற்றமையை மதுபரிபாலன ஆலோசனைச் சங்கத்தார் இன்னும் சிந்திக்கவில்லை. பண்டத்தரிப்பிலும் பெரியவிளானிலும் உள்ள தவறணைகள் சனசமூகத்துக்குக் கெடுதியை விளைப்பனவாயிருக்கின்றன.

எனவே, இவை துரிதத்திலொழிக்கப்படல் கூடுமென்றே நம்பப்படுகின்றது. வலிகாமமேற்கு மதுவிலக்குச்சங்கத்தாருக்குப் போதியளவு வேலையிங்கேயிருக்கின்றது. இப்பகுதிகளிலுள்ள அநேக தவறணைகளிலே, வேலணையிலுள்ள தவறணையாவது இவ்வருடத்திலே ஒழிக்கப்படல் வேண்டியிருக்கின்றது. அங்கே இன்னும் ஆறு கள்ளுத்தவறணைகளிருக்கின்றன. இவைகள் யாவும் ஒருங்குகூடி, ஊர்காவற்றுறையிலிருக்கும் சாராயத் தவறணை நீக்கப்படாதிருக்குமாயின், அது தீவுபற்று அடங்கலும் செய்யக்கூடிய தீங்கில் அரைப்பங்குதானுஞ் செய்யக்கூடியனவாயிரா. இப்போது நாங்கள் வேலையின் மத்தியபாகத்துக்கு வருவோம். பட்டினப் பகுதிகளிலே எங்கள் முயற்சி, தீவிர சித்திபெய்தாமையின் பொருட்டு நாங்கள் பெரிதும் வருந்துகின்றோம். நல்லூர் சாராயத் தவறணை நீக்கத்துக்கும், திருநெல்வேலி கள்ளுத் தவறணை நீக்கத்துக்கும் எடுக்கப்பட்ட சனசம்மதத்திலேயே நாங்கள் முதன்முறையாகத் தோல்வி படைந்தோம். இதன்பின்னர், வண் தென்மேற்குத் தவறணை விஷயத்தில் ஏமாற்றமடைந்தோம். கடைசியாய்ப் பட்டினப்பகுதியிலுள்ளனவாய கரையூர், வண்தென்மேற்கு, நல்லூர் முதலிய இடங்களிலுள்ள தவறணைகளில பெறவேண்டிய வெற்றியை இழந்தோம். கடைசி இருமுறைகளையுங் குறித்து எக்சைஸ் அட்வைசரிக் கழகத்தாருக்கு ஆக்ஷேபங்கள் நிகழ்த்தப்பட்டன. ஆனால் அதைக் குறித்த தீர்மானங்களையிட்டு இன்னும் எங்களுக்கு யாதும் அறிக்கைகள் கிடைக்கவில்லை. இத்தவறணைகள் நீக்கப்படாமையின் காரணம் எங்கள் முயற்சிக் குறைவன்று; ஆனால், சனங்கள் கட்டுப்பாட்டின் அமையாமையே அதன் காரணமாம்.

இவையாவற்றுள்ளும் அடங்காத்தனத்துக்குக் காரணமாக இருப்பன, பல கடைகள் ஓரேமுறையில் நீக்கப்படுவதற்குச் சனசம்மதம் எடுப்பதும், ஒருவருடத்துக்குப் பதிலாக மூன்று வருடத்துக்குச் சாராயக்குத்தகை விற்கப்படுவதுமேயாம். வடமாகாணத்தில் நகரசங்க எல்லைக்குள் தவறணைகள் யாவும் ஓரேகாலத்திற் சனசம்மதம் எடுக்க ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஒழுங்கு பிரதானமான தவறணை நீக்கத்தின் பொருட்டும் சனங்களைச் சம்மதி கொடுக்க இடமில்லாது செய்து விடுகின்றது. தவறணைகளிலே பல வகுப்புகளுண்டு. குறிக்கப்பட்ட ஒரு வகுப்புத் தவறணையை வைத்திருக்க விரும்புகின்றவர்கள் தங்கள் விருப்பத்திற்கு மாறாக இருக்கின்றனர். ஏனைய தவறணைகளை நீக்கிவிடுவதையும் எதிர்க்கின்றனர். நகரசங்க எல்லைக்குளிருக்குந் தவறணைகளைக் குறித்த விஷயம் இதுவேயாம். கள்ளுத்தவறணைகளை மூடுவதற்கு மாறாக இருக்கும் மரமேறிகள், ஏனைய தவறணைகள் நீக்கப்படுவதையும் எதிர்க்கின்றனர். எனவே, பல தவறணைகள் ஒருங்கே நீக்கச் சனசம்மதம் எடுக்கும் சம்பவமானது, குத்தகைகாரினாலே பலர் கூட்டுறவுடன் எதிர்க்கப்படுகின்றது. சாராயத் தவறணைகள் அரசினராலே மூன்றுவருடகாலத்துக்கு குத்தகை கொடுக்கப்படுகின்றது. எனவே தங்கள் குத்தகை கால எல்லை முடியும் வரையில், குத்தகைகாரர் சாராயத்தவறணைகள் நீக்கப்படாதிருக்கும் பொருட்டு முயற்சிசெய்வது ஆச்சரியமான கருமமன்று. இவைகளைக் குறித்தது தக்க ஆக்ஷேபங்கள் அரசினருக்கு நிகழ்த்தப்படுமாயின் ஒருசமயம் இந்த விக்கினங்கள் நீக்கப்படல்கூடும். சனங்களிடத்துள்ள வன்மத்தினாலாவது, விரோதத்தினாலாவது குறிக்கப்பட்ட சில கிராமத்துள்ள தவறணைகள் நீக்கப்படும் விஷயத்திலே தோல்வியுற்றதல்லவென்பது ஒப்புக்கொள்ளத்தக்கது. கள்ளுக்கடை நீக்கப்பட்டவிடங்களி லொன்றான மானிப்பாயிலே, திருப்பவும் கள்ளுக்கடை வைக்க எத்தனித்தமைக்கு எதிராகச் சமராடியதில் நாங்கள் பெரும் ஜெயமடைந்தோம். இத்தேசமானது குடிவகைக்கு மாறாக எத்தகைய தீர்மானங் கொண்டிருக்கின்றதென்பதை இதுபோல வேறு ஒன்றுந் தெளிவாகக் காட்டாதன்றோ! எங்கள் பிரயத்தனங்களிலே தக்க சித்தி பெறுவோமென்பதிலே எங்களுக்குத் தக்க நம்பிக்கையுண்டு. இங்கு, பண விஷயமாக ஓர் சொல்லுச் சொல்லவேண்டியிருக்கின்றது. இதன்பொருட்டு மூலதனம் வேண்டியிருக்கின்றது. இதன்பொருட்டு வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட பணம் கொடுக்கப்படல் வேண்டும். இன்னும் மேலதிகமாகக் கையொப்பஞ் சேர்ப்பதிலே நாம் பெரிது வேலைசெய்தல்வேண்டியிருக்கின்றது. எங்கள் விண்ணப்பத்தின்வண்ணம் சனசமூகம் பெரிதும் உபகரிக்கும் என்பதும் அதன்மூலமாக எங்கள் முயற்சிகள் அநுகூலமாகுமென்பதும் நம்பிக்கையாம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

நல்லூர்க்கந்தசுவாமிகோவில் மகோற்சவத்தின் பொருட்டு இக்கல்லூரி வழக்கம்போல், இந்த ஆகஸ்ட் மீ 1உ தொடக்கம் விடுதலை செய்யப்பட்டது. ஆகஸ்ட் மாதம் 20உ வியாழக்கிழமை கல்லூரி ஆரம்பமாகும்.

காரைநகர்ச் சைவ மகாசபை இளைஞர் கழகம்.

இக்கழகத்தின் ஒன்பதாம் மாசாந்தக் கூட்டம் நிகழும் குரோதன ௵ ஆடி மீ 21-க்கு சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் ஷை சபையின் சபாமண்டபத்தில் ஸ்ரீ வே. தில்லைநாதன் B. A. அவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ் நடைபெறும். அத்தருணம் எல்லா இளைஞர்களும் சமூகமளிக்கும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

பெரும் பணநஷ்டம்.

யாழ்ப்பாணத்திலுள்ள நாட்டுக்கோட்டைச் செட்டிமார் கடைகளில் சோம. கு. வெ என்னும் இரண்டு பெருங் கடைகள் நஷ்டமடைந்துபோயின. இதனால், இக்கடைகளிற் பணம் சேமித்து வைத்திருந்த யாழ்ப்பாணத்தாருக்கு பதின்மூன்று லட்சம் ரூபாவரையில் நஷ்டம் என்று தெரியவருகின்றது. மலாய்நாட்டில் உத்தியோகமாயிருக்கும் யாழ்ப்பாணத்தார் சேமித்துவைத்த பணமே இதிற் பெரும்பாகமாம்.

ஓர்பத்திராசிரியருக்குத் தண்டனை.

லாகூரில் பிரசுரமாகும் “குருசக்தால்” என்னும் பத்திரிகையின் ஆசிரியரான சர்தார் மங்களசிங் என்பார் வகுப்புத் துவேஷத்தை உண்டுபடுத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பெற்றார். இவர்மீது சுமத்தப்பட்ட குற்றம் ருசுப்படுத்தப்பட்டமையின் ஆறு மாசச் சிறைவாசமும் 100 ரூபா அபராதமும் பெற்றார்.

இறந்த திமிங்கிலம்.

சென்ற சனிக்கிழமை ஹிக்கடுவாக் கடற்கரையோரமாக ஒரு இறந்த திமிங்கிலம் வந்து அடைந்தது. அதன் நீளம் 40 அடிவரையிலிருக்குமாம். சிற்சில இடங்களிற் தோலும், தசையும் சிதைந்துவிட்டமையினால் என்புகள் காணப்படுகின்றன. அக்கிராமத்திலும் அயற் கிராமத்திலுமிருந்து ஆயிரக்கணக்கான சனங்கள் அதனைப் பார்க்கும் வண்ணஞ் செல்கின்றனர்.

பாதிரியாரின் பரிதாபமரணம்.

ஆபிரிக்காவிலே கேப்டவுன் என்னுமிடத்திலே பாதிரியார் ஒருவர் தமது மனைவி, மக்கள், வேலைகாரன் முதலியோருடனே அடர்ந்த காட்டினூடாகச் சென்றுகொண்டிருந்தபோது, அங்கு கண்ட சிங்கம் ஒன்றை நோக்கிச் சுட்டார். சூடு சிங்கத்தின் தலையையுரோஞ்சிச் சென்றது. இதனாற் கோபங்கொண்ட சிங்கமானது பாதிரியார்மேற் பாய்ந்து அவரைக் கொன்றுவிட்டது.

வல்வைச் சைவ வாலிபசங்கம்.

வல்வைச் சைவவாலிபசங்கம் இந்த ஆடி மீ 13உ செவ்வாய்க்கிழமை பிற்பகல், 7 மணியளவில், சமயகுரவர்களுள் ஒருவராகிய சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை இச்சங்கத்தாரால் நடத்தப்பட்டது. நாயனாருடைய சரிதையை ஸ்ரீ. கா. கந்தசாமிப்பிரசங்கியார் வெகு விமரிசையாகப் பக்கவாத்தியசகிதமாகச் சங்கமண்டபத்தில் பிரசங்கம் செய்தார். மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபம் முழுதுங் குழுமியிருந்த சனங்கள் மிகவும் பக்தியோடும் ஆவலோடும் சரிதத்தை முடிபுவரைகேட்டு ஆனந்தமடைந்தனர். சிற்றுண்டி வழங்கப்பட்டபின் கூட்டம் பதினொன்றரை மணியளவில் முடிவெய்தியது.

கடித.

மாணவனின் தற்கொலை.

இந்தியாவிலே நுங்கம்பாக்கம் என்னும் இடத்திலுள்ள கலாசாலையிற் பி. ஏ வகுப்பிற் கல்விபயின்ற வசு வெங்கடராவ் என்னும் மாணவன் புகைரதப்பாதையிற் சென்று, புகைரதம் வரும்போது அதன் முன்னே பாய்ந்து தற்கொலை செய்துகொண்டானாம். காரணம் தெரியவில்லை.

வெறிப் பதார்த்தம்.

சென்னையிலே அன்னபூரணம்மாள் என்னும் ஓர் ஸ்திரி அரிசியிலிருந்து தயாரிக்கப்படுவதும், மிகுந்த வெறியைக் கொடுப்பதுமான சொண்டி சோரு வென்னும் வெறிப் பதார்த்தத்தைத் தனது வீட்டிலே ஏராளமாகச் சேகரித்துவைத்திருந்தமைக்காக ரூபா 150 அபராதம் விதிக்கப்பட்டாள். அபராதம் கொடுக்கத் தவறின் மூன்றுமாசச் சிறைவாசஞ் செல்ல வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

காத்திராப்பிரகாரம்நேர்ந்தவிபத்து.

கண்டியிலே நமது (பிரதி) தேசாதிபதியவர்கள் தமதுபிள்ளைகளுடனும், டினிற்றிக்கல்லூரிப் பாதிரியாரான E. F போர்ட் அவர்களுடனும் மலபார் வீதியிலுள்ள ஓர் செங்குத்தான இடத்திலே குதிரையிற் சென்று கொண்டிருந்தனர். அச்சமயத்திலே அங்குநின்ற சிலயானைகளைக்கண்டதும் தேசாதிபதியவர்களின் குதிரை வெருண்டு முப்பது அடிகள் கீழேயுள்ளவிடத்தில் வீழ்ந்துவிட்டது. தேசாதிபதியவர்களுக்கு உச்சியிலும் பிற இடங்களிலும் சிறு காயங்கள் பட்டன. இப்போது காயங்கள் சௌக்கியமடைந்து வருவதாகச் சொல்லப்படுகின்றது. குதிரை உடனே மாண்டுபோனது.

பிராமணப் பெண்ணும் கொலைக் குற்றமும்.

ராமச்சந்திரப்பூரைச் சார்ந்த கிராமம் ஒன்றிலுள்ள ஓர் பிராமணப் பெண் தனது புருடனின் மூத்த மனைவியின் புதல்வனை பத்து வயதுச் சிறுவனின் தலையிலே மரக்கட்டை பொன்றால் அடித்து, அவனை விழுத்தி அவன் வயிற்றில் மிதித்து, அவன் மீது கொதிக்கும் எண்ணையை யூற்றி, அவனைக் குற்றுயிரிற் கொண்டுபோய்க் கிணற்றுள் வீழ்த்திக் கொடுங்கொலை செய்ததாகத் தொடரப்பட்ட வழக்குக் கோதாவரிக் கோட்டிலே விசாரணை செய்யப்பட்டது. இதன் தீர்ப்புச் சீக்கிரம் வெளிவரும். இச் சிறுவன் இறந்துவிட்டால், தனது புருடனின் பொருள் முழுவதும் தனது பிள்ளைக்குச் சேர்ந்துவிடும் என்னும் ஆசையினாலேயே இவள் இக் கொடிய கொலையைச் செய்ததாகச் சொல்லப்படுகின்றது.

ஓர் குடியானவனின் பரிதாபம்.

நக்கோட்டையிலுள்ளகிரிபண்டாவென்னும் ஒருவன் தனது வளவிலே தக்கவிதமாக மலக்கூடம் அமைத்துக்கொள்ளாத காரணத்தையிட்டு மாத்தளைப் பொலிஸ் கோட்டிலே வழக்குத்தொடரப்பெற்றான். அதை விசாரணைசெய்த நீதிபதிமுன் அவன் பின்வருமாறு கூறினான்:—ஐயா, “நான் அற்பசம்பளம் பெறும் ஓர் கூலிக்காரன், எனது இயல்புக்குத்தக்கவாறு எனது வளவிலே ஓர் மலக்கூடம் அமைத்துக்கொள்ள விரும்பினேன். இதைக் குறித்துச் சுகாதாரசங்கத் தலைவருக்கு விண்ணப்பப்பத்திரம் ஒன்று அனுப்பிவிட்டு மலக்கூடமமைப்பதற்கு ஆரம்பித்தேன். சுகாதாரப் பகுதிப் பரிசோதகர் வந்து என்னைத்தடுத்து இன்ன இன்ன விதமாக அதனைக்கட்டல்வேண்டுமென்று கூறினர். அவரின் எண்ணத்துக்கு அதனை அமைப்பதற்கு என்னிடம் பணம் இல்லாமையால் எனது வளவை விற்றுவிட்டு, இப்போது நானும் எனது மனைவியும் தெருவில் நிற்கின்றோம்” நீதவான் இவன் கூறினமை யுண்மையோவென விசாரிக்குமாறு பரிசோதகருக்குக் கூறினர். மலக்கூடம் அமைக்கும் விஷயத்தில் இக் கிரிபண்டாவுக்கு நேர்ந்த கதியே தங்களுக்கும் நேருமோவென்று யாழ்ப்பாண நகரசங்க எல்லைக்குள் வசிப்பவர்கள் அஞ்சுகின்றார்கள்.

தான வரவு.

கொழும்பு போட் கொம்மிசன் பகுதியில் லிகிதராயிருந்து சில தினங்களின் முன் காலஞ்சென்ற ஸ்ரீ சி. மாசிலாமணியவர்களின் அபரக்கிரியையில் யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபைக்கு வரித்தனுப்பிய ரூபா இரண்டு பெற்றும்.

சுப்பிரமணிய சிவம்,

தென்னாட்டில் சுமார் இருபதாண்டு கட்கு முன்னர் பெரியதொரு அரசியல் கிளர்ச்சியை யுண்டுபண்ணி உறங்கிக்கிடந்த தமிழ்மக்களைத் தட்டியெழுப்பி அரசியலறிவுச் சுடர் கொளுத்திய சுப்பிரமணிய சிவம் நாளிதுமாசம் அவர் பாப்பாரப்பட்டியில் காலஞ்சென்றார். திலகர் பெருமானின் கொள்கைவழிச் சென்றவர். அஞ்சாநெஞ்சம் படைத்தவர். ஆண்மையோடு மன்றமேறி வாயுரை வழங்கும்போது கேட்போர் உடலில் வீர ஊற்று ஊறுவதைக் காணலாம். இந்திய நாடு சுதந்தரம் பெற வேண்டுமென்ற ஒன்றினையே தமது வாழ்வின் நோக்கமாகக்கொண்ட இப்பெரியாரும் இவ்வாண்டில் உயிர் துறந்தனர். காரைக்குடியில் பலநாள் வதிந்து அரும்பணி பல செய்தார். நம்மவர் யாவரும் சுப்பிரமணிய சிவாவை நன்கு அறிவர். ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம்பிள்ளையோடு சிறை சென்ற ஆறுவருட காலத்தில் சிறையிலேயே நோய்வாய்ப்பட்டார். அந்நோயினால் அவரடைந்த துன்பம் மிகப்பெரிது. ஸ்ரீ சிவம், தேசத்தில் கொண்டிருந்த பற்றைப் போலவே சமயப்பற்றுங் கொண்டிருந்தார்.

குமரன்.

கடிதம்.

ஆயிரம் பிறைத்தரிசன விசேஷமும் சந்திர உபாசனையும்.

நிதிலா மாதகாளிற் றிங்களைப் பசுவைக் கண்டாற், கோதிலா நன்மை சேய்க்குக் கூடுமென் றியம்பினாரே”

எனும் பிரமாணப்படி பிள்ளை பிறந்த நான்கா மாசத்திலே பிதா மாதாக்கள் அவசியம் காட்டுவதோடு பிள்ளை தானாகவே காணும் வடசுவரையும் காட்டிவரல் வேண்டும். இப்பிரகாரம் கண்டுவரும் பிள்ளைக்கு, சூரிய சஞ்சாரத்தால் ஐந்து வருஷத்திற்கு, 62, சந்திரோதயமுண்டாகும். அங்ஙனம் (80) ௵ (8,மீ, வரையில் சீவித்திருப்பவர்கள் ஆயிரம் பிறையைக் காண்பார்கள். அப்படி ஆயிரம் பிறையைக் கண்ட புண்ணிய சீலர்கள் தமது சென்ம மாசம் சென்ம நட்சத்திரத் தன்று, “சதாபிஷேகம்” என்னுங் கிரியையைச் செய்யக்கடவர்கள். இவ்வாயிரம் பிறைத்தரிசனத்தால் சுவர்க்கலோக பதவியை யடைவர்கள். இத்தரிசனம் புண்ணிய சீலர்க்கேயன்றி ஏனையோர்க்குக் கிடைப்பதரிது.

நெடுங்காலம் ருதுவாகி விவாகம் ஆகாத பெண்கள் சீக்கிரம் விவாகம் ஆகவேண்டுமென்றும், நல்ல கணவன் வேண்டுமென்றுஞ் சங்கற்பித்து, மூன்றும் பிறைத் தரிசனத் தன்று விடியற் காலமெழுந்து நித்திய கர்மானுஷ்டான முதலியவற்றைச்செய்து, புதிய வெள்ளை வஸ்திரம் அல்லது வெண்பட்டுச் சேலையையுடுத்தி பகல் முழுவதும் போசனமருந்தாதிருந்து மாலை நேரமாகுந் தருணம் வெண்பொங்கள் செய்து வெள்ளைப் புஷ்பங்களினால் சந்திரனுக்குரிய பூசை முதலியவற்றைச் செய்து தானுடுத்திய சேலையிலுள்ள முந்தானையிலிருக்கும் ஒரு சிறிய நூலிழையை யெடுத்துப் பிறையைப் பார்த்து நமஸ்கரித்து சந்திரனுக்குரிய மந்திரத்தினால் அதனைக் கீழே போட்டு தூபதீபம் கற்பூர நீராஞ்சனங் காட்டிப் பின்னும் இயன்றளவு நமஸ்கரித்து பின்பெரியோர்களுடனிருந்து போசனஞ் செய்தல் வேண்டும். இங்ஙனம் இவ்விரதத்தை மனவிசுவாசத்தோடு ஒருவருஷம் அநுஷ்டித்து வருவார்களேயானால் தான் மனசிலே உத்தேசித்த கணவனை அதிவிரைவாக விவாகஞ் செய்து கொள்வார்களென்று “சல்பமஞ்சரி” என்னும் நூலில் கூறப்படுகின்றது. ஆகையால் நெடுங்காலம் ருதுவாகி விவாகம் ஆகாத பெண்கள் சந்திர உபாசனையாகிய இவ்விரதத்தை அநுஷ்டிக்கக் கடவர்கள்.

சந்திரன் ஆன்மாக்களுடைய மனசிற்கு அதிபதியாயிருத்தலினாலும், பெண்கள் ஒவ்வொரு மாசமும் வீட்டுக்கு விலக்காயிருத்தற்குக் காரணனாயிருத்தலினாலும், எங்கள் தேசத்தில் நாடோறும் அமுதகலை, விஷகலை, இவற்றை அந்தந்த ஸ்தானங்களில் விரும்பபடி செய்தற்குக் காரணனாயிருத்தலினாலும், ஸ்திரீ புருஷர்களின் மனவொற்றுமைக்கும், கெற்பம், புல், பூண்டு முதலியவற்றிற்கும், நாங்கள் தொடங்கும் ஒவ்வொரு சுபமுகூர்த்தங்களுக்கும் பார்க்கும், சந்திரபெலம், தாராபலம், இவற்றிற்கும் இன்னுஞ் சில கருமங்கட்கும் அதிதேவனான சந்திரனே காரணன் என்பதை யறியக்கடவர்கள். அதுபற்றியன்றோ நம்மவர்கள்தொடங்குஞ் சங்கற்பத்தில் “ததேவலக்கம்ஸுதினம்ததேவதாராபலஞ்சந்திரபலம்” எனத் தொடங்குகின்றார்கள்.

“திங்களே நன்றதாகிற் செப்புமெக்கோளு நன்று, மங்களமியதாகி [illegible] நோக்கிதம், பொங்கிய மனத்தோடொத்த புலனெனவுரைக்கலாமன், மங்கையே யாதலாலே மதியமே வலியதாமே”

இங்ஙனம்,
ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
அம்மன்கோயில்
சுதுமலை,

பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.

அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ரூத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையி லுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை முற்கூட்டியே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
அ பி. வல்லுவெட்டித்துறை.

(H. 37)

ஹிஸ்டிரியா என்னும் மூர்ச்சைவியாதி நிவர்த்தியாயிற்று

என்று திருவானைக்காவல் சோராமய்யரவர்கள் பின்வருமாறு சென்னைக் கேஸரி குடீரம் கம்பனியாருக்கு எழுதினர்.

4 வருஷகாலமாய் அடிக்கடி (பஹிஷ்டை காலத்தில் வரும் ஹிஸ்டிரியா) மூர்ச்சைவியாதியால் வெகு ஆபத்தாய்ப்படுத்திருந்த என் பாரியாளுக்கு உம்மிடமிருந்து தருவித்த "லோத்ராவி"னுபயோகத்தால் சம்பூரணகுண முண்டாயிற்று.

"கேஸரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை
எழும்பூர், மதராஸ்

Y. 35. A.)

விளம்பரம்.

இனும்! கலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், நம். 1-ம், நம். 2-ம் வெள்ளியாலும் மிச்சம் அப்புரவாக வேலைசெய்த முரிச்சுக்குத்தி கெங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால்தண்டை, செயின்கொலிசு, இன்னும் காலிற் போடுஞ் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச்சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சிமை வயிரக்கப்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசந்தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

ஈா. பிளே செட்டி அன் கோ.,
குகை சேலம்,
தென் இந்தியா.

(H. 39)

புதிய தினுசுகள் சகாய விலைகள்
நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரீஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்நாடு, காஞ்சிபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமான பட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO,

Y. 39).

சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசந்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம், S I

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H 32

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாராற்
பிரசுரஞ் செய்யப்பெற்ற

புத்தக விளம்பம்.

	ரூ. ச.
முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது)	க0
இரண்டாம் பாலபாடம் ,,	கடு
மூன்றும் பாலபாடம் ,,	உ0
நான்காம் பாலபாடம்	௩.0
ஐந்தாம் பாலபாடம்	ச0
ஆறும் பாலபாடம்	௫0
கலாமஞ்சரி விளக்கத்துடன்	எடு
கிருட்டிணன் றூது, உரையுடன்	அடு
நமச்சிவாயமாலை, உரையுடன்...	ரூ
ஆத்திசூடி	ரூ
வெற்றிவேற்கையுரை	ரூ
வாக்குண்டாமுரை	ரூ
நல்வழியுரை	ரூ
நன்னெறியுரை	ரூ
இனியவை நாற்பதுரை (ஆங்கிலமொழிபெயர்ப்புடன்)...	கஉ
இலக்கண வினுவிடை...	க0
நிகண்டு கக-வதும் கஉ-வதும் ...	உடு
திருவாதவூரடிகள்புராண மூலம் ...	உடு
திருச்செந்தூர்ப்புராணவுரை கிளேஸ்காகிதம்	க-உடு
றவ்காகிதம்...	க-00
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன்	க0
கந்தசஷ்டி கவசம்	ரூ
சுப்பிரமணியசுவாமி விருத்தம் ...	ரூ
ஆறுமுகசுவாமி விருத்தம்... ...	ரூ
பிள்ளையார்கதை	கஉ
கதிரைமலைப் பேரின்பக்காதல் ...	கஉ
பிரபஞ்சப் பெருவழக்கு	க0
இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்?	க0
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு)	௬
நளமணசரித்திரம் ,,	௬
பஞ்சரத்தினத் திருப்புகழ்	ரூ
சோமவாரவிரதமான்மியம்...	க0
கந்தவிரதமான்மியம்	க0
சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு)	கடு
மறைசையந்தாதி	உ0

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்றல் ஆடரேனும் மனி ஆடரேனும் முத்திரைச்செலவுஞ் சேர்த்து வண்ணார்பண்ணைத் தபாலாபீசிற் பெறக்கூடியதாக அனுப்புதல்வேண்டும். இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த ஆடர்கள் எம்மால் வீ பீ. யில் அனுப்பப்படமாட்டா.

சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

சபையார் அச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், பிறிற்ருனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தக சாலை முதலிய இடங்களிலும், பருத்தித்துறை S. P. சுல்த்தான் சிக்கந்தரிடத்திலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப்பிள்ளை, வீ. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

தங்க மலாம் பூசிய ரிஸ்லெட் கெடியாரம்.

இந்த கெடியாரம் பார்வைக்கு பொன் கெடியாரம் போலவேதோற்றம். வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும். சரியான டைம் காட்டக்கூடியது. வெகுகாலம் நன்ருய் போகக்கூடியது.

பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரமும் பொன் கில்ட் ஸ்பிரிங் பட்டையுடன் 6-8 0.

ஸ்ட்ரேட் செடல்மெண்டிக்கும் F. M. S. மலேயாஸ்ட்ரேட்டும் முன்பணமில்லாமல் C. O. D. மூலியமாக அனுப்ப முடியாது.

விலாசம்:—கனக அண்டு கம்பேனி,
(H. 35) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

"ஸ்ரான்டேர்ட்" கொழுக்கியோடுகள்:
(Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஒடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—

முதலாவது, இத்தஓடுகள் மிகப்பாரங்குறைந்தனவும்

இரண்டாவது, இவைகள் நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றவது, இந்த வடஇலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இசைந்த ஓடுகள் இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற நாலு வருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்நாலு வருடகாலத்தில் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இவை சிறந்ததென்பதற்கு இந்த ஒரு நியாயமுமே போதிய சான்ருகும்.

S. வீரகத்திப்பிள்ளை,
சோல் ஏஜண்டு,
யாழ்ப்பாணம்.

(H. 34.)

சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிருர்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரிக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அபகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகரமாலை, பிதநபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா க0. கால்ரூத்தலுக்கு ரூபா ௫ தாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு,
இலங்கை.

(M. 36.)

அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ்அண்டு மருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ் (முதல்தர)தேவநௌஷதங்களெனத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும் பெற்ற

உலகம் புகழ்வது. உள்ள நாளும் மறவாதது.

பழனி, சி. எம். சாமி

மகாவீரிய தங்கபஸ்பம்.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகல வியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது ஒருமுறை பரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபாரசக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையுங் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதையும் திரும்ப உண்டாக்குகிறது. மேகவியாதிகள், பவுத்திரம், மூலம், நீரிழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சுருமேகம் சூலை முதலிய சகல கர்ம வியாதிகளும் நீங்கும். பத்தியமில்லை.

1 மண்டலம் 48 நாள் பஸ்பம் ரூபா 20, அரை மண்டலம் 24 நாள் பஸ்பம் ரூபா 10.

குருநாகபஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்பிரேஷன் அவசியமில்லை மூளை தானே கரையும். சீழ்மூலம், இரத்த மூலம், குத்தல் மூல முளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0

குருதாளகபஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், சுட்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8 வித காசமும் அவசியம் தீரும். அநுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

கெர்ப்ப எண்ணெய்.

இது ஸ்திரீகள் சஞ்சீவி எனலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய்ப் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், கிளைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும்நீங்கி கெர்ப்பமுண்டாகும். மிக்க அநுபவமானது. புட்டி ஒன்று விலை ரூபா 2.

மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரிய சித்தி, தனலாபம், புத்திர சந்தானம், தெய்வ அனுகூலம் உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி, முதலியன நீங்கும். சத்து 1க்கு ரூபா 2 6 சத்து ரூபா 10.

ரோம சங்காரி.

ஐந்தேநிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது. தோல் கெடாது. புட்டி 1க்கு அணு 8.

சர்வபடை நிவாரணி.

சகல மேகப்படை, ஊறல், பூச்சிக்கடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள் ஒரேநாளில் உதிர்ந்துவிடும். உடனே அரிப்பு நிற்கும். தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், மற்றும் மேகரோகங்கள், நீர்ச்சுருக்கு, எரிச்சல், சூத்தவுடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் தீரும்; தவருது. புட்டி ஒன்றுக்கு ரூபா 2.

வி. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
C. மலையப்பசாமிப்பிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி.

(Q. 64 A)

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna,